www.surabooks.com

சுராவின்

# பொருளியல்*

## மேல்நிலை - முதலாம் ஆண்டு

### சிறப்பம்சங்கள் :

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.
  1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
  2. பொருத்துதல்
  3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
  4. பொருந்தாததை கண்டறிதல்
  5. கூற்று மற்றும் காரணம்
  6. சரியான கூற்றைக் கண்டறிதல்
- அரசு மாதிரி வினாத்தாள் *[Govt. MQP-2018]*, முதல் பருவ இடைத்தேர்வு *[First Mid-2018]*, காலாண்டுத் தேர்வு 2018, 2019 & 2023 *[QY-2018, 2019 & '23]*, அரையாண்டுத் தேர்வு 2018, 2019, 2023 & 2024 *[HY-2018, '19, '23 & '24]*, அரசு பொதுத் தேர்வு மார்ச் 2019, 2020, மே 2022, மார்ச் 2023 & 2024 *[March-'19, 2020, May-'22, March-'23 & '24 ]*, அரசு துணைத்தேர்வு செப்டம்பர் *[Sep-2020 & '21]*, திருப்புதல் பொதுத்தேர்வு 2022 *[CRT-'22]*, உடனடித் தேர்வு ஆகஸ்ட் 2022, ஜூன் 2023 & ஜூலை 2024 *[Aug-'22, June-'23 & July -'24]* மற்றும் பொதுத்தேர்வுக்கான முக்கிய வினாக்கள் *[BEQ]* ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரையாண்டுத் தேர்வு டிசம்பர் 2024–25 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்

சென்னை

For Orders Contact

80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 9840926027

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG 214

எழுதி வழங்கியவர்
A. முகம்மது M.A., M.Phil., B.Ed.,
PG Assistant

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**Our Guides for XI, XII Standard**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

தலைமை அலுவலகம்
சுரா பப்ளிகேஷன்ஸ்
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

10/02/2025

# பதிப்பாசிரியர் உரை

11ம் வகுப்பிற்கான சுராவின் **பொருளியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். பொருளியல் பாடங்களுக்கான வினா விடைகள் /பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் பொருளியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் பொருளியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், பொருளியல் பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

***வாழ்த்துக்கள் !!!***



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

www.surabooks.com


# பொருளடக்கம்


| இயல் எண் | பாடத் தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|
| 1. | நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம் | 1 - 23 | ஜூன் |
| 2. | நுகர்வுப் பகுப்பாய்வு | 24 - 46 | |
| 3. | உற்பத்தி பகுப்பாய்வு | 47 - 69 | |
| 4. | செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு | 70 - 88 | ஜூலை |
| 5. | அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும் | 89 - 106 | |
| | **முதல் இடைபருவத் தேர்வு 1 முதல் 5 பாடங்கள் (ஜூன், ஜூலை)** | | |
| 6. | பகிர்வு பற்றிய ஆய்வு | 107 - 127 | ஆகஸ்ட் |
| 7. | இந்தியப் பொருளாதாரம் | 128 - 150 | |
| 8. | இந்தியப் பொருளாதாரம் விடுதலைக்கு முன்னரும் பின்னரும் | 151 - 170 | செப்டம்பர் |
| | **காலாண்டுத் தேர்வு 1 முதல் 8 பாடங்கள் (ஜூன் - செப்டம்பர்)** | | |
| 9. | இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள் | 171 - 186 | அக்டோபர் |
| 10. | ஊரகப் பொருளாதாரம் | 187 - 204 | |
| 11. | தமிழ்நாட்டுப் பொருளாதாரம் | 205 - 222 | நவம்பர் |
| | **இரண்டாம் இடை பருவத் தேர்வு 9 முதல் 11 பாடங்கள் (அக்டோபர், நவம்பர்)** | | |
| 12. | பொருளியலுக்கான கணித முறைகள் | 223 - 242 | நவம்பர் |
| | **அரையாண்டுத் தேர்வு (மொத்த பாடங்கள்)** | | |

| | | |
|---|---|---|
| அரையாண்டுத் தேர்வு - டிசம்பர் 2024-25 வினாத்தாள் விடைகளுடன் | 243 - 250 | |




enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000



SURA'S
2025-26 EDITION
SCHOOL GUIDES
SURA'S 50 years service to education
For Class
11th Std
English & Tamil Medium
SG145
SG137
SG215
SG262
SG264
SG266
SG268
SG270
SG274
SG272
SG278
SG138
SG144
SG277
SURA PUBLICATIONS
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040. INDIA. Phones: 044-48629977, 48627755
Mobile: 81242 01000 / 81243 01000
email : enquiry@surabooks.com
orders@surabooks.com
Buy online @
surabooks.com

# இயல் 1

# நுண்ணினப் பொருளியல்: ஓர் அறிமுகம்

## பொருளடக்கம்


1.1 அறிமுகம்
1.2 பொருளியல் : பொருள்
1.3 பொருளியல் : அதன் தன்மைகள்
1.3.1 செல்வ இலக்கணம் : ஆடம் ஸ்மித்
1.3.2 நல இலக்கணம் : ஆல்ஃபிரட் மார்ஷல்
1.3.3 கிடைபருமை இலக்கணம் : இலயனல் இராபின்ஸ்
1.3.4 வளர்ச்சி இலக்கணம் : சாமுவேல்சன்
1.4 பொருளியலின் எல்லை
1.4.1 பொருளியல் : பாடப்பொருள்
1.4.2 பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்
1.4.3 பொருளியல் : இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல்
1.5 பொருளியலின் அடிப்படைக் கருத்துகள்
1.5.1 பண்டங்கள் மற்றும் பணிகள்
1.5.2 பயன்பாடு
1.5.3 விலை
1.5.4 அங்காடி
1.5.5 செலவு
1.5.6 வருவாய்
1.5.7 சமநிலை
1.5.8 வருமானம்
1.6 பொருளியல் முறைகள், கூறுகள், கோட்பாடுகள் மற்றும் விதிகள்
1.6.1 பொருளியல் ஆய்வு முறைகள் : பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு
1.6.2 பொருளாதார உண்மைகளும், கோட்பாடுகளும்
1.6.3 பொருளியல் விதிகளின் இயல்புகள்
1.7 பொருளியலின் உட்பிரிவுகள்
1.7.1 நுகர்வு
1.7.2 உற்பத்தி
1.7.3 பரிமாற்றம்
1.7.4 பகிர்வு
1.8 பொருளியலின் வகைகள்
1.8.1 நுண்ணியல் பொருளியல்
1.8.2 பேரியல் பொருளாதாரம்
1.8.3 பன்னாட்டுப் பொருளாதாரம்
1.8.4 பொது நிதிப் பொருளாதாரம்
1.8.5 வளர்ச்சிப் பொருளாதாரம்
1.8.6 சுகாதாரப் பொருளாதாரம்
1.8.7 சுற்றுச் சூழல் பொருளாதாரம்
1.9 அடிப்படை சிக்கல்கள்
1.10 உற்பத்தி வாய்ப்பு வளைகோடு
1.11 தொகுப்புரை


www.surabooks.com



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

# கருத்து வரைபடம்

## 1. நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம்

### பொருளியல் : பொருள்

- **பொருளியல் அதன் இயல்புகள்**
  - செல்வ இலக்கணம் : ஆடம்ஸ்மித்
  - நல இலக்கணம் : ஆல்ஃபிரட் மார்ஷல்
  - கிடைபருமை இலக்கணம் : இலயனல் இராபின்ஸ்
  - வளர்ச்சி இலக்கணம் : சாமுவேல்சன்
- **பொருளியலின் எல்லை**
  - பொருளியல் : பாடப்பொருள்
  - பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்
  - பொருளியல்: இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல்
- **பொருளியலின் அடிப்படைக் கருத்துகள்**
  - பண்டங்கள் மற்றும் பணிகள்
  - பயன்பாடு
  - விலை
  - அங்காடி
  - செலவு
  - வருவாய்
  - சமநிலை
  - வருமானம்
- **பொருளியல் முறைகள், கூறுகள், கோட்பாடுகள் மற்றும் விதிகள்**
  - பொருளியல் ஆய்வு முறைகள் : பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு
  - பொருளாதார உண்மைகளும் கோட்பாடுகளும்
  - பொருளியல் விதிகளின் இயல்புகள்
- **பொருளியலின் உட்பிரிவுகள்**
  - நுகர்வு
  - உற்பத்தி
  - பரிமாற்றம்
  - பகிர்வு
- **பொருளியலின் வகைகள்**
  - நுண்ணியல் பொருளியல்
  - பேரியல் பொருளாதாரம்
  - பொதுப் பொருளாதாரம்
  - வளர்ச்சி பொருளாதாரம்
  - சுகாதாரப் பொருளாதாரம்
  - சுற்றுச்சூழல் பொருளாதாரம்

www.surabooks.com



## முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பொருளியல்** | : | பொருளியல் (Economics) என்ற சொல் ஆய்க்கனோமிக்ஸ் (Oikonomikos) என்னும் பழமையான கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. 'பொருளியல்' என்றால் 'இல்லங்களின் நிருவாகம்' என்று பொருள். |
| **ஆய்க்கோஸ் (Oikos)** | : | 'ஆய்க்கோஸ்' என்றால் இல்லங்கள் என்று பொருள். |
| **நாடுகளின் செல்வம்** | : | ஆடம்ஸ்மித்தின் நூலான "நாடுகளின் செல்வம் (1776)" – வெளியீட்டுக்குப்பின் பொருளியல் ஒரு தனி இயலாக உருவானது. |
| **பொருளியலின் எல்லை** | : | பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும். |
| **பொருளியல் ஒரு கலை** | : | கலை என்பது நடைமுறையில் உள்ள ஒரு குறிப்பிட்ட இலக்குகளை அடைய அறிவைப் பயன்படுத்துவதாகும். பொருளியல் அனைத்து பொருளாதார சிக்கல்களுக்கும் தீர்வு காண வழிகாட்டுகிறது. |
| **பொருளியல் ஓர் அறிவியல்** | : | அறிவியல் என்பது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஓர் அறிவுத் தொகுதியாகும். |
| **பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்** | : | பொருளியல், சிக்கல்களின் காரண விளைவுகளுக்கு இடையேயுள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது, ஆகையால் பொருளியல் கலை அறிவியலாக கருதப்படுகிறது. |
| **இயல்புரை அறிவியல்** | : | இயல்புரை அறிவியல், 'உள்ளதை உள்ளவாறு' கூறுகிறது. |
| **நெறியுரை அறிவியல்** | : | நெறியுரை அறிவியல், 'எதுவாக இருக்க வேண்டும்' என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. |
| **பொருளியலின் அடிப்படைக் கருத்துக்கள்** | : | மற்ற அறிவியல்களைப் போன்றே பொருளியலிலும் அதன் கோட்பாடுகளை விளக்கும் சில கருத்துக்கள் உள்ளன. |
| **பண்டங்கள் மற்றும் பணிகள்** | : | பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டும் மனித விருப்பங்களை நிறைவு செய்கின்றன. |
| **பொது பொருட்கள்** | : | பொருள்களுக்கான விலையைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், அப்பொருள் அனைவரின் நுகர்விற்கும் கிடைக்கும். |
| **தனியார் பொருட்கள்** | : | தனி ஒருவரால் மட்டும் நுகரக் கிடைக்கும். |
| **நுகர்வோர் பண்டங்கள்** | : | நுகர்வோர் பண்டங்கள் என்பன நேரடியாக மனித விருப்பங்களை நிறைவேற்றுவதாகும். (எ.கா.) ஊர்திகள். |
| **மூலதன பண்டங்கள் (உற்பத்தியாளர்கள் பண்டங்கள்)** | : | மூலதன பண்டங்கள் என்பவை நேரடியாக நுகர்வோருக்கு மனநிறைவு தருவதில்லை. இது நுகர்வோர் பண்டங்களைத் தயாரிக்க பயன்படுகின்றன. (எ.கா.) இயந்திரங்கள். |
| **அழியும் பண்டங்கள்** | : | விரைவில் அழியக்கூடிய பண்டங்கள் அழியும் பண்டங்கள் ஆகும். இதன் ஆயுட்காலம் குறைவானது. (எ.கா.) பூக்கள், பழங்கள். |
| **நீடித்து இருக்கக் கூடிய பண்டங்கள்** | : | விரைவில் அழியக்கூடிய பண்டங்களைவிட நீடித்து இருக்கக்கூடிய பண்டங்கள். இதன் ஆயுட்காலம் நீண்டது. (எ.கா.) மேசை. |
| **பணிகள்** | : | பண்டங்களோடு சேர்த்து பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன. |
| **பயன்பாடு** | : | பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஆற்றலே பயன்பாடு எனப்படும். |
| **அறிவுப் பயன்பாடு** | : | அறிவுப் பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி பெறும் அறிவாகும். |
| **பயன்பாட்டை அளவிடுதல்** | : | மனிதனின் விருப்பம், நுகர்வின் போது நிறைவடைகிறது. நுகர்வோர் பெறும் பயன்பாடு யுடில்ஸ் (utils) என்று அளவிடப்படுகிறது. |
| **விலை** | : | பண்டங்களின் மதிப்பை பணத்தால் குறிப்பிட்டால் அது விலை எனப்படும். |
| **அங்காடி** | : | அங்காடி என்பது பொருட்களை வாங்குவதும், விற்பதும் நடைபெறும் ஒரு இடமாகும். |

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



| | | |
|---|---|---|
| **செலவு** | : | செலவு ஒரு குறிப்பிட்ட அளவு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அல்லது வாங்குவதற்கு ஏற்படும் செலவினங்களைக் குறிக்கிறது. |
| **வருவாய்** | : | பண்டங்கள் மற்றும் பணிகளை விற்று ஈட்டும் வருமானம் வருவாய் எனப்படும். |
| **சமநிலை** | : | சமநிலை என்பது மாற்றமில்லா நிலையை குறிக்கும். |
| **வருமானம்** | : | வருமானம் என்பது ஒரு பொருளாதார அலகால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஈட்டப்பட்டதாகவோ, ஈட்டப்படாததாகவோ, பணமாகவோ அல்லது பிறவகைச் சம்பாத்தியமாகவோ பெறுவதாகும். |
| **உண்மை வருமானம்** | : | உண்மை வருமானம் என்பது பண வருமானத்தின் மூலம் வாங்கும் பண்டங்களின் அளவாகும். |
| **பொருளியல் பகுத்தாய்வு முறை** | : | பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும். |
| **பொருளியல் தொகுத்தாய்வு முறை** | : | தொகுத்தாய்வு முறை தனிக் கருத்திலிருந்து பொதுக் கருத்தைப் பெறுவதாகும். |
| **நுகர்வு** | : | மனித விருப்பங்களை நிறைவு செய்வது நுகர்வு ஆகும். |
| **உற்பத்தி** | : | உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும். |
| **பரிமாற்றம்** | : | பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது. |
| **பகிர்வு** | : | பகிர்வு என்பது உற்பத்தி காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும். |
| **நுண்ணியல் பொருளியல்** | : | தனிப்பட்ட பொருளாதார முகவர்களான உற்பத்தியாளர், நுகர்வோர் எடுக்கும் பொருளாதார முடிவுகளை விளக்குவது நுண்ணியப் பொருளியல் ஆகும். |
| **பேரியல் பொருளியல்** | : | ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றி விளக்குவது பேரியல் பொருளியல் ஆகும். |
| **பொது நிதிப் பொருளாதாரம்** | : | பொதுநிதி என்பது வருமானம் அல்லது வருவாயை அதிகரிக்க பொது அதிகார அமைப்புகள் ஒன்றோடொன்று இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கையை விளக்குகிறது. |
| **வளர்ச்சிப் பொருளாதாரம்** | : | வளர்ச்சி பொருளாதாரமானது வளர்ந்த நாடுகளின் இயல்புகள், வளர்ச்சிக்கானத் தடைகள், வளர்ச்சிக்கு உதவும் பொருளாதாரக் காரணிகள் மற்றும் பொருளாதாரம் சாராத காரணிகள், பல்வேறு வளர்ச்சி மாதிரிகள் மற்றும் வளர்ச்சிக்கான உத்திகள் போன்றவற்றை விளக்குகிறது. |
| **சுகாதாரப் பொருளாதாரம்** | : | சுகாதாரப் பொருளாதாரம் என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒருபகுதியாகும். |
| **அடிப்படைப் பொருளியல் சிக்கல்கள்** | : | என்ன உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? என்பது எந்த ஒரு பொருளாதாரத்திலும் காணப்படும் அடிப்படை சிக்கல்கள் ஆகும். |
| **உற்பத்தி வாய்ப்பு வளைகோடு** | : | ஏதேனும் இரு பொருள்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு பதில் தரும் வகையில் வடிவியல் சாதனம் மூலம் விளக்குவதே உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனப்படும். |

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



## இலக்கணம்

| | | |
|---|---|---|
| **பகுத்தாய்வு முறையின் இலக்கணம்** | : | பகுத்தாய்வு முறையானது (Deductive Method) பொதுக்கருத்திலிருந்து தனிக்கருத்தைப் பெறுவது ஆகும். தொன்மைப் பொருளியல் அறிஞரான ரிகார்டோ பகுத்தாய்வு முறையைப் பின்பற்றினார். |
| **தொகுத்தாய்வு முறையின் இலக்கணம்** | : | தொகுத்தாய்வு முறையானது (Inductive Method) தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்தைப் பெறுவதாகும். அறிவியல் தேடுதலில் தொகுத்தாய்வு முறையே சிறந்தது என்று பிரான்சிஸ் பேகான் (Francis Bacon) கூறுகிறார். |
| **ஆல்ஃபிரட் மார்ஷலின் பொருளியில் விதிகளின் இலக்கணம்** | : | ஆல்ஃபிரட் மார்ஷல் "பொருளியல் விதிகளை எளிய துல்லியமான புவிஈர்ப்பு விசை விதிகளோடு ஒப்பிடுவதை விட கடல் அலைகளின் விதிகளோடு ஒப்பிடலாம்" என்று குறிப்பிட்டுள்ளார். |
| **செலிக்மென் வருமான இலக்கணம்** | : | "பொருளியலில் வருமானம் என்பது பொருளியல் பண்டங்களிலிருந்து கிடைக்ககூடிய மன நிறைவினைக் குறிக்கும் என்று செலிக்மென் கூறுகிறார்". |
| **ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணம்** | : | ஆடம் ஸ்மித் (1723 - 1790) "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" (1776) என்ற தனது நூலில் "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்று வரையறுத்துள்ளார். |
| **ஆல்ஃபிரட் மார்ஷலின் நல இலக்கணம்** | : | அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனைஅடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வது ஆகும். பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும், முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது. |
| **இலயனல் இராபின்ஸ் பற்றாக்குறை இலக்கணம்** | : | இலயனல் இராபின்ஸ் பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே ஆகும்". |
| **சாமுவேல்சன் வளர்ச்சி இலக்கணம்** | : | பால் அந்தோணி சாமுவேல்சன் பொருளியல் என்பது, "மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு, பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்" என வரையறை செய்கிறார். |
| **பேரியல் பொருளாதாரம்** | : | து.ஆ. கீன்ஸ், "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு" என்ற நூல் தற்கால பேரியல் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது என்று கூறுகிறார். |
| **நெறியுரைப் பொருளியலின் இலக்கணம்** | : | "நெறியுரைப் பொருளியல் எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல்" என்று ஆசிமாகாபுலூஸ் (Asimakopulos)கூறுகின்றார். |
| **நுண்ணியல் பொருளாதாரம் வரையறை** | : | தனி ஒரு பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள் அல்லது தொழில், தனிக்குடும்பங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது நுண்ணியல் பொருளாதாரம் ஆகும். |
| **பென்ஹாமின் அங்காடி இலக்கணம்** | : | "நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ, வாங்குபவரும், விற்பவரும் சந்திக்கும் ஓர் இடமே அங்காடியாகும். எடுத்துக்காட்டாக மீன் சந்தை மீன்களை விற்கும் இடமாகும் இங்கு வாங்குவோரும் விற்போரும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். அங்காடியில் ஒரு பகுதியில் கொடுக்கப்படும் விலையானது அதன் மறுபகுதியில் கொடுக்கப்படும் விலையைப் பாதிக்கும்" என்று பென்ஹாம் கூறுகின்றனார். |
| **கீன்சின் பொருளாதார இலக்கணம்** | : | J.M. கீன்ஸ் "அரசியல் பொருளாதாரம் தனது வரையறை மூலம் தனக்கு தானே குரல்வளையை நெரித்துக்கொள்கிறது" என்பதாக பொருளியலை அணுகுகிறார். |

## புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

### மாதிரி வினாக்கள்

### பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்.** *[May-'22; QY–'23; Mar. & HY-'24]*

(அ) ஆடம் ஸ்மித்
(ஆ) இலயனல் இராபின்ஸ்
(இ) ஆல்ஃபிரட் மார்ஷல்
(ஈ) சாமுவேல்சன்

விடை **(இ) ஆல்ஃபிரட் மார்ஷல்**

**2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை சிக்கல்** *[BEQ; QY-'18; June-'23]*

(அ) எண்ணற்ற விருப்பங்கள்
(ஆ) அளவற்ற வளங்கள்
(இ) பற்றாக்குறை
(ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

விடை **(இ) பற்றாக்குறை**

**3. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?** *[BEQ; First Mid - '18; Sep-2020; July & HY-'24]*

(அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்
(ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
(இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
(ஈ) ஒட்டு மொத்த பொருளாதாரத் தொடர்பு

விடை **(இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்**

**4. கீழ்க்காண்பவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?** *[BEQ; Govt. MQP-'18]*

(அ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 2.5% அதிகரித்துள்ளது.
(ஆ) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலை பெற்றுள்ளது.
(இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.
(ஈ) கடந்த ஆண்டுபொது விலை 4% அதிகரித்துள்ளது.

விடை **(இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது**

**5. பொருந்தா ஒன்றைக் கண்டறிக.** *[BEQ; Govt. MQP-'18; First Mid - '18; QY-'18]*

(அ) "நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை"
(ஆ) "பொருளாதாரக் கோட்பாடுகள்"
(இ) "பொருளாதாரஅறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்"
(ஈ) "மற்றவை மாறாதிருக்கும்போது"

விடை **(ஈ) "மற்றவை மாறாதிருக்கும்போது"**

**6. சமநிலை விலை என்பது அந்த விலையில்** *[HY - '19;CRT-'22; June-'23]*

(அ) எல்லாம் விற்கப்படுகிறது
(ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
(இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
(ஈ) மிகைத்தேவை சுழியம்

விடை **(இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்**

**7. நாடுகளின் செல்வத்தையும் காரணங்களையும் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்** *[Mar-'19; Aug-'22; Mar & HY-'23]*

(அ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) இலயனல் ராபின்ஸ் (ஈ) பால் அ சாமுவேல்சன்

விடை **(ஆ) ஆடம் ஸ்மித்**

**8. விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என இலக்கணம் வகுத்தவர்.**

(அ) இலயனல் இராபின்ஸ்
(ஆ) ஆடம் ஸ்மித் (இ) ஆல்ஃபிரட் மார்ஷல்
(ஈ) பால் அ சாமுவேல்சன்

விடை **(அ) இலயனல் இராபின்ஸ்**

**9. தொன்மைப் பொருளாதாரத்தின் தந்தை யார்?** *[BEQ; HY-'18; Mar-2020;CRT-'22]*

(அ) மாக்ஸ் முல்லர் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) கார்ல் மார்க்ஸ் (ஈ) பால் அ சாமுவேல்சன்

விடை **(ஆ) ஆடம் ஸ்மித்**

**10. பொருளியல் என்பது ஒரு சமூகஅறிவியல் என்று கூறுவர். ஏனெனில்,**
(அ) காரணம் மற்றும் விளைவுகளுக்கிடையே உள்ள தொடர்பு
(ஆ) விதிகளை உருவாக்குவதற்கு தொகுத்தாய்வு முறையும், பகுத்தாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.
(இ) பரிசோதனைகள்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

விடை **(ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**11. பயன்பாடு என்பது** *[Mar-'19; QY-'23]*
(அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
(ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி
(இ) பண்டங்களின் மொத்த மதிப்பு
(ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

விடை **(ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி**

**12. அங்காடி என்பது** *[QY - '19; May-'22]*
(அ) பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
(ஆ) பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
(இ) விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்
(ஈ) மனிதர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.

விடை **(ஈ) மனிதர்கள் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.]**

**13. எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?**
(அ) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
(ஆ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை
(இ) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு
(ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.

விடை **(ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.**

**14. வளர்ச்சி இலக்கணம் என்பது**
(அ) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
(ஆ) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்.
(இ) செல்வத்தை உற்பத்தி செய்வதும் பகிர்வதும்
(ஈ) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்

விடை **(அ) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை**

**15. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?** *[Sep-2021; QY & HY-'23]*
(அ) விலைக் கோட்பாடு
(ஆ) வருமானக் கோட்பாடு
(இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு
(ஈ) வணிகக் கோட்பாடு

விடை **(அ) விலைக் கோட்பாடு**

**16. ________ பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்.** *[BEQ]*
(அ) பண்டங்கள் (ஆ) சேவைகள்
(இ) அங்காடிகள் (ஈ) வருவாய்

விடை **(அ) பண்டங்கள்**

**17. பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க.**
(அ) இது பயனுக்கும் சமமானது.
(ஆ) இது நீதிநெறி முக்கியத்துவம் கொண்டது
(இ) இது மகிழ்வுக்கு சமமானது
(ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது

விடை **(ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது**

**18. பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?** *[QY - '19; Mar-'24]*
(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்
(இ) இராபின்ஸ் (ஈ) ராபர்ட்சன்

விடை **(இ) இராபின்ஸ்**

**19. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை** *[First Mid - '18; Mar-'23; July-'24]*
(அ) பகுத்தாய்வு முறை (ஆ) தொகுத்தாய்வு முறை
(இ) இயல்புரை அறிவியல்
(ஈ) நெறியுரை அறிவியல்

விடை **(ஆ) தொகுத்தாய்வு முறை**

**20. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?** *[CRT & Aug-'22]*

(அ) விலை
(ஆ) மொத்தச் செலவு
(இ) இறுதி சமநிலை வருவாய்
(ஈ) இறுதி சமநிலைச் செலவு

**விடை (அ) விலை**

## பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.**

**21. பொருளியல் என்றால் என்ன?** *[BEQ; QY - '19; Sep-2020; Aug-'22; HY-'24]*

விடை.
- ♦ பொருளியல் என்ற சொல் **ஆய்க்கனோமிக்ஸ்** என்னும் பழமையான கிரேக்க சொல்லிலிருந்து வந்தது.
- ♦ 'பொருளியல்' என்றால் **இல்லங்களின் நிருவாகம்** என்று பொருள்படும்.
- ♦ ஆரம்பத்தில் அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்ட இவ்வியல், பிற்பகுதியில் **'பொருளியல்'** என்று ஆல்ஃபிரட் மார்ஷலால் பெயர் மாற்றப்பட்டது.

**22. நுண்ணியல் பொருளியல் என்றால் என்ன?** *[HY - '19;CRT-'22; QY-'23; Mar-'24]*

விடை.
- ♦ தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியல் என்கிறோம்.
- ♦ பல்வேறுபட்ட சந்தை சூழலில் தொழில் நிறுவனங்கள், வாங்குபவர்கள், விற்பவர்கள் இணைந்து எவ்வாறு விலையைத் தீர்மானிக்கும் செயலில் ஈடுபடுகிறார்கள் என்பதை நுண்ணிய பொருளியல் தெளிவுபடுத்துகிறது.

**23. பண்டங்கள் என்றால் என்ன?** *[June-'23]*

விடை.
- ♦ **மனித விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும்** பொருளியலில் பண்டங்களாக கருதப்படுகின்றன.
- ♦ பண்டங்கள் தொட்டுணரக்கூடியவை, உருவ வடிவமுடையவை, அதன் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும். மாற்றக் கூடியவை, பரிமாற்ற மதிப்பு உடையவை.

**24. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.**

விடை. *[BEQ; First Mid - '18; QY-'18]*

| வ. எண் | பண்டங்கள் | பணிகள் |
|---|---|---|
| 1 | பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும். | பண்டங்களோடு சேர்த்து பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன. |
| 2 | பண்டங்களுக்கு உருவ அடையாளம் உண்டு. | பணிகளுக்கு உருவ அடையாளம் இல்லை. |
| 3 | பண்டங்கள் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும். | பணிகளை உருவாக்கு பவரிடமிருந்து பிரிக்க இயலாது. |

**25. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.** *[BEQ; First Mid & HY - '18; May-'22; QY-'23; July-'24]*

விடை.
- ♦ வடிவப் பயன்பாடு.
- ♦ காலப் பயன்பாடு.

**26. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.**

விடை. இயல்புரை அறிவியல், உள்ளதை உள்ளவாறு கூறுகிறது. அதாவது ஒரு சிக்கலை, பிரச்சினையை உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது.

**27. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**

விடை. பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும். பகுத்தாய்வு முறையை பகுத்தறியும் முறை என்றும் கருத்தியலான முறை என்றும் கூறுவதுண்டு.

## பகுதி - இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

**28. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.** *[BEQ; First Mid - '18; Sep-'21; Mar-'23]*

விடை. பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய **மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே**" ஆகும் என இலயனல் இராபின்ஸ் கூறியுள்ளார்.

**இராபின்ஸ் இலக்கணத்தின் முக்கிய சிறப்பியல்புகள்:**

- மனித விருப்பங்கள் எல்லையற்றவை.
- மனிதனின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களின் அளிப்புகள் பற்றாக்குறையாகவே உள்ளன.
- பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக்கூடியவையாக உள்ளன.

**திறனாய்வு :**

- இராபின்ஸ் மனிதர்களுக்கு நலன் தரக்கூடிய பொருட்கள் அல்லது நலன்தரா பொருட்கள் என்று தரம் பிரிக்கவில்லை.
- பொருளியல் என்பது நுண்ணியல் பொருளியல் கருத்துகளான வளங்களைப் பங்கிடுதல், பண்டங்களின் விலைத் தீர்மானம் ஆகியவற்றை மட்டுமே கூறுவது அல்ல. அது பேரியல் பொருளாதார நிகழ்வுகளான **நாட்டு வருமானம்** எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதையும் உள்ளடக்கியது.
- இவ்விலக்கணமானது பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

**29. "என்ன உற்பத்தி செய்ய வேண்டும்" என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?** *[BEQ; QY-'18&'23;HY-'24]*

விடை.
- உணவு, உடை, வீட்டுப் பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?
- வேளாண்மைப் பொருட்களை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது தொழிற்சாலைப் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதா?
- வளங்களை, அதிகமாகக் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? அல்லது வளங்களை அதிகமாக ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா?
- நுகர்வுப் பண்டங்களை அதிகம் வைத்துக்கொள்வதா? அல்லது முதலீட்டுப் பண்டங்களை வைத்துக் கொள்வதா?
- அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

**30. பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.** *[BEQ; HY-'18 & '23;CRT & May-'22]*

விடை. பொருளாதார நடவடிக்கைகள் நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு ஆகியவைகளாகும்.

- **நுகர்வு :** மனித விருப்பங்களை நிறைவு செய்யும் **நுகர்வு, பொருளாதார நடவடிக்கைகளின் துவக்கப் புள்ளியாக** விளங்குகிறது.
- **உற்பத்தி :** உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.
- **பரிமாற்றம் :** பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது.
- **பகிர்வு :** உற்பத்தி என்பது காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.

**31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?** *[Sep-2020;CRT-'22; June- '23]*

விடை. **பணிகளின் இயல்புகள்:**

- **கண்ணுக்குப் புலனாகாதவை :** புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை. ஆனால் மற்ற பண்டங்களோடு தொடர்புடையவை. (எ.கா.)அடையாள குறியீடு, நிறுவன நன்மதிப்பு.
- **பலதரப்பட்டவை :** பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகின்றன.

  (எ.கா.) இசை மற்றும் மருத்துவர் சேவை.
- **பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது:** பணிகள் அவற்றை செயல்படுத்துபவருக்கே உரியவை.

  (எ.கா) உழைப்பாளரிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது.
- **அழியக்கூடியவை :** பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது.

  (எ.கா.) மட்டை பந்து விளையாட்டை காண வழங்கப்பட்ட கட்டண விலை விளையாட்டு முடிந்த பிறகு பயன்தராது.

**32. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?** *[Aug-'22; Mar-'24]*

விடை.
- பயன்பாடு **உளவியல் சார்ந்தது.**
- பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல.
- பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்.
- பயன்பாடு மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது.
- பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும்.
- பயன்பாடு நீதிநெறி, ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.
- பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல.

www.surabooks.com

**33. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?**

*[BEQ; Govt. MQP-'18;First Mid -'18; Mar-'19; QY - '19 & '23; Sep-'21; June-'23]*

**விடை.**

| வ. எண் | நுண்ணியல் பொருளியல் | பேரியல் பொருளியல் |
|---|---|---|
| 1 | தனிப்பட்ட பொருளாதார முகவர்களான உற்பத்தியாளர், நுகர்வோர் எடுக்கும் பொருளாதார முடிவுகளை விளக்குவது நுண்ணியல் பொருளியல் பிரிவு. | இந்த பிரிவு முழுப் பொருளாதாரத்தின் முழுத் தொகுதியையும் ஆராயும் பகுதிகள் கொண்டது. (எ.கா) மொத்த உற்பத்தி, தேசிய வருவாய், மொத்த சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியன. |
| 2 | பொருளாதாரத்தின் சிறு பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. | நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. |
| 3 | இப்பிரிவு தனியொரு பண்டம் மற்றும் காரணியின் விலை எவ்வித முறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. | இது பொருளாதாரத்தின் பொது விலை நிலையோடு தொடர்புடையது. |
| 4 | இது விலைக்கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. | இது வருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. |
| 5 | தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரது உத்தம அளவு குறிக்கோளுடன் தொடர்பு உடையது. | இது வளர்ச்சி முறையின் உத்தம அளவுடன் தொடர்புடையது. |

**34. இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக.** *[BEQ; HY - '19; July-'24]*

**விடை.**

| வ. எண் | இயல்புரை பொருளியல் | நெறியுரை பொருளியல் |
|---|---|---|
| 1 | பண அளிப்பு அதிகரிப்பு பொருளாதாரத்தில் விலை ஏற்றத்தை ஏற்படுத்துகிறது. | பணவாட்டத்தை விட பணவீக்கமே மேலானது. |
| 2 | நீர்ப்பாசன வசதி மற்றும் இரசாயன உரங்களின் விரிவாக்கத்திற்கேற்ப உணவு தானிய உற்பத்தி அதிகரிக்கிறது. | வளர்ச்சி குறைந்த நாட்டில் ஆடம்பரப் பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வது நல்லதல்ல. |
| 3 | பிறப்பு வீத அதிகரிப்பும், இறப்பு வீதக் குறைவும் மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தில் பிரதி பலிக்கின்றன. | செல்வ வருமானப் பகிர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும். |

## பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.** *[BEQ; Govt. MQP-'18; QY-'18 & '23; Sep-2020;CRT & May-'22]*

**விடை. முன்னுரை :**

ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் பொருளியலின் கருத்து வளர்ச்சிக்கு ஏற்ப நான்கு வரையறைகள் தரப்பட்டுள்ளன. அவை

**தொன்மைக் காலம் – ஆடம்ஸ்மித் செல்வ இலக்கணம்(1723–1790) :**

ஆடம் ஸ்மித் "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" எனும் தனது நூலில் "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்கிறார். அவரைப் பொருத்தவரை சமுதாயத்தில் உள்ள தனிமனிதன் தன் இலாபத்தை பெருக்கி கொள்ள விரும்பும்போது அவரை திரைக்கு பின்னாலிருந்து ஒரு புலனாக உந்து சக்தி வழி நடத்துகிறது.



www.surabooks.com

**திறனாய்வு :**

மதம் மற்றும் ஆன்மீக மதிப்பீடுகள் மேலோங்கியிருந்த காலக் கட்டத்தில் ஸ்மித் தனது வரையறையை வழங்கியுள்ளார். எனவே இரஸ்கின் மற்றும் கார்லைல் போன்றோா, நீதிநெறிக்கு புறம்பான சுயநலத்தைக் கற்றுத் தருவதாக பொருளியல் வர்ணிக்கப்படுவதால், பொருளியலை ஓர் 'இருண்ட அறிவியல்' என கூறியுள்ளனர்.

**புதிய தொன்மை காலம் – மார்ஷலின் நல இலக்கணம் :**

தன்னுடைய "பொருளியல் கோட்பாடுகள்" (1890) என்ற நூலில் மார்ஷல், "அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதாகும். பொருளியல் ஒரு புறம் செல்வத்தைப் பற்றியும், மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது."

**திறனாய்வு :**

மார்ஷல் பொருள் சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார். பொருள் சாரா நலனை தரக்கூடிய மருத்துவர் பணிகளும் மனித நலனை மேம்படுத்துகிறது. மக்கள் நலனை மேம்படுத்தும் மற்றும் மேம்படுத்தாத பொருட்களை மார்ஷல் வேறுபடுத்தியுள்ளார். தனிமனிதனின் நலன் அல்லது நாட்டின் நலனானது அந்த நாட்டின் செலவு இருப்பை மட்டுமே சார்ந்தது அல்ல.

**புதிய யுகம் – இராபின்ஸின் கிடைப்பருமை இலக்கணம் :**

"பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை" (1932) எனும் தமது நூலில் இராபின்ஸ் "பொருளியல் விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியல்" என்கிறார்.

**திறனாய்வு :**

இராபின்ஸ் மனிதர்களுக்கு நலன்தரக்கூடிய பொருட்கள் அல்லது நலன்தரா பொருட்கள் என்று தரம் பார்க்கவில்லை. ஆனால் மதுபான உற்பத்தி மனிதனின் நலனை மேம்படுத்தாது இராபின்ஸ் பொருளியலை வளங்களை ஒதுக்கீடு செய்யும் இயலாக மட்டுமே சுருக்கிவிட்டார். இந்த இலக்கணம் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

**நவீன யுகம் – சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணம் :**

பொருளியல் என்பது, "மனிதனும் சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும், எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்" என சாமுவேல்சன் வரையறை செய்கிறார்.

**திறனாய்வு :**

எல்லையற்ற இலக்குகளோடு தொடர்புடைய சாதனங்கள் பற்றாக்குறையானவை, அவை மாற்றுப் பயனுடையவை என இராபின்சைப் போன்றே பால் சாமுவேல்சனும் கூறுகிறார். சாமுவேல்சன் காலத்தையும் சேர்த்து இயக்கத் தன்மையுடையதாக உருவாக்கியுள்ளார். பண்டமாற்றுப் பொருளாதாரத்திற்கும் இவ்விலக்கணம் பொருந்தும். உற்பத்தி, பகிர்வு மற்றும் நுகர்வு போன்ற பல கருத்துகளையும் உள்ளடக்கியுள்ளது. சாமுவேல்சன் பொருளியலை ஒரு சமூக அறிவியலாக கருதினார். ஆனால் இராபின்ஸ் பொருளியலை தனி மனிதனின் நடத்தை பற்றிய அறிவியலாகக் கருதினார்.


**முடிவுரை :**

அனைத்து இலக்கணங்களிலும் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணமே அதிக திருப்திகரமானதாகக் கருதப்படுகிறது.

**36. பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.**

*[BEQ; First Mid - '18; HY - '19 & '24; Mar.-'24]*

**விடை.**




**பகுத்தாய்வு முறை :**

பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும்.

பகுத்தாய்வு முறையை 'பகுத்தறியும் முறை' என்றும் 'கருத்தியலான முறை' என்றும் கூறுவதுண்டு.

**பகுத்தாய்வு முறையின் படிகள்**

**படி 1** : எந்த பிரச்சினையை ஆராய்கிறோம் என்பதை துல்லியமாகவும், தெளிவாகவும் ஆராய்ச்சியாளர் அறிந்திருக்க வேண்டும்.

**படி 2** : ஆய்வில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப கருத்துக்களை தெளிவாக ஆய்வாளர் வரையறுக்க வேண்டும்.

**படி 3** : அனுமானங்களின் (Assumptions) வாயிலாக கருதுகோள்களை (Hyothesis) உருவாக்க வேண்டும்.

**படி 4** : கருதுகோள்கள் எதார்த்த உலகில் நேரடி உற்று நோக்கல் மூலமாகவும், புள்ளியியல் ஆய்வு முறைகள் மூலமாகவும் சரிபார்க்கப்பட வேண்டும்.
(எ.கா) :- ஒரு பண்டத்தின் விலைக்கும் அப்பண்டம் தேவைப்படும் அளவிற்கும் தலைகீழ் உறவு உள்ளது.

**தொகுத்தாய்வு முறை :** தொகுத்தாய்வு முறை என்பது தனிக்கருத்திலிருந்து பொதுக் கருத்தைப் பெறுவதாகும். தொகுத்தாய்வு முறை என்பது செயலறி முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**தொகுத்தாய்வு முறையின் படிகள் :**

**படி 1** : ஒரு குறிப்பிட்ட பொருளாதார நிகழ்வுகளைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து, அவற்றை முறையாக ஒழுங்குபடுத்தி, அவற்றிலிருந்து பொது முடிவுக்கு வருவதாகும்.

**படி 2** : விவரங்களை உற்று நோக்குவது மூலம் முடிவுக்கு வருவதும் எளிது.

**படி 3** : விவரங்களைப் பொதுமைப்படுத்தி கருதுகோள்கள் உருவாக்குதல்

**படி 4** : கருதுகோள்களை சரிபார்த்தல்
(எ.கா.) ஏங்கலின் விதி.

**37. பொருளியலின் தன்மையையும், எல்லையையும் விவரி.** *[BEQ; HY-'18; Aug-'22; Mar-'23]*

விடை. **பொருளியலின் தன்மைகள் :**

பொருளியலின் இயல்பினை குறிப்பிட்ட சில பொருளியல் அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

♦ **செல்வ இலக்கணம் :**
**ஆடம்ஸ்மித் (1723 – 1790) :** ஆடம்ஸ்மித் **"நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு"** (1776) எனும் தனது நூலில் செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என்று வரையறுத்துள்ளார்.

♦ **நல இலக்கணம் :**
**ஆல்ஃபிரட் மார்ஷல் (1842– 1924):** ஆல்ஃபிரட் மார்ஷல் தன்னுடைய பொருளியல் கோட்பாடுகள் என்னும் நூலில், பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள்சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும். பொருளியல் ஒருபுறம் செல்வத்தை பற்றியும், மறுபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது.

♦ **கிடை பருமை (பற்றாக்குறை) இலக்கணம்:**
**இலயனல் இராபின்ஸ் :** இலயனல் ராபின்ஸ் "பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை எனும் தமது நூலை 1932ல் வெளியிட்டார்". பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப் பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே" ஆகும்.

♦ **வளர்ச்சி இலக்கணம் :**
**சாமுவேல்சன் :** சாமுவேல்சன், பொருளியல் என்பது "மனிதனும் சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும், எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது" என்பதை தெரிவு செய்யும் இயலாகும் என வரையறை செய்கிறார்.

♦ **பொருளியலின் எல்லை :** பொருளியலின்எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும். பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா மற்றும் அறிவியலாக இருப்பின் அது இயல்புரையியலா அல்லது நெறியுரையியலா என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறது. இது பண்டங்கள் மற்றும் பணிகளின் நுகர்வு, உற்பத்தி மற்றும் உற்பத்திக் காரணிகளுக்கான வருமானப் பகிர்வு ஆகியவைகளை ஆராய்கிறது.

♦ **பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்:** பொருளியல், சிக்கல்களின் காரண விளைவுகளுக்கு இடையேயுள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது. இயற்பியல், வேதியியலைப் போன்றே பொருளியலும் ஓர் அறிவியல் என்று

www.surabooks.com



இராபின்ஸ், ஜோர்டன் மற்றும் ராபர்ட்சன் போன்றோர் கருதுகின்றனர். ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது.

♦ **பொருளியல், இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல் :**

**இயல்புரை அறிவியல் :** 'உள்ளதை உள்ளவாறு' கூறுகிறது. பிரச்சினைகள் உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது.

**நெறியுரை அறிவியல் :** 'எதுவாக இருக்க வேண்டும்' என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. இங்கு முடிவுகள் உண்மையின் அடிப்படையில் அமைவதில்லை.

**38. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு, பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.** *[First Mid - '18; Mar-'19; QY - '19 & '23 HY-'23]*

விடை. ♦ **உற்பத்தி வாய்ப்பு வளைகோடு :** *[July-'24]*

இரு பொருள்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு பதில் தரும் முறையை வடிவியல் சாதனம் மூலம் விளக்குவதே, உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனப்படும்.

♦ **எடுகோள்கள் :**

(1) காலத்தில் மாற்றம் இல்லை.

(2) உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் நிலையானது.

(3) கொடுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு இரு பண்டங்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்.

(4) உற்பத்திக்காரணிகளின் அளவும், தரமும் கொடுக்கப்பட்டுள்ளன.

(5) உற்பத்தியில் குறைந்துசெல் விதி நிலவுகிறது.


♦ **உற்பத்தி வாய்ப்பு அட்டவணை :**

(1) கீழ்காணும் அட்டவணையைப் பயன்படுத்தி ஓர் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டை வரையலாம்.

| உற்பத்தி வாய்ப்புகள் | உணவு உற்பத்தியின் அளவு (டன் கணக்கில்) | மோட்டார் வாகனத்தின் உற்பத்தி எண்ணிக்கை |
|---|---|---|
| I | 0 | 25 |
| II | 100 | 23 |
| III | 200 | 20 |
| IV | 300 | 15 |
| V | 400 | 8 |
| VI | 500 | 0 |

(2) இந்த அட்டவணையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்பத்தில் அனைத்து வளங்களும் உணவு உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டால், அதிகபட்சம் 500 டன் உணவை உற்பத்தி செய்ய முடியும் என்பதை அறியலாம்.

(3) உற்பத்தி வாய்ப்பு அட்டவணைக் கொண்டு வரையப்படுவது உற்பத்தி வாய்ப்பு வளைகோடு வரையலாம்.




♦ **வரைபட விளக்கம் :**

(1) X – அச்சில் உணவின் அளவும், Y – அச்சில் மோட்டார் வாகனத்தின் எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளது.

(2) வெவ்வேறு ஆறு வகையான உற்பத்தி வாய்ப்புகளும் $P_1$, $P_2$, $P_3$, $P_4$, $P_5$, $P_6$ என்ற புள்ளிகளால் குறிப்பிடப்பட்டுள்ளன.

(3) அளிக்கப்பட்ட வளங்களையும், தொழில் நுட்பத்தையும் கொண்டு ஒரு சமுதாயமோ நிறுவனமோ உற்பத்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய வரைபாதையை $P_1$ லிருந்து $P_6$ உற்பத்தி வளைகோடு காட்டுகிறது.

(4) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் உள்ள $P_7$ போன்ற புள்ளியை சமுதாயத்தால் அடைய முடியும், ஆனால் அப்போது வளங்கள் முற்றிலுமாக பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும்.

(5) உணவு உற்பத்தியின் அளவை நிலைபெறச் செய்து மோட்டார் வாகனங்களின் உற்பத்தியை அதிகரிக்கலாம் அல்லது ஒரே சமயத்தில் இரண்டின் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்.

♦ **உற்பத்தி வாய்ப்பு வளைகோடு மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி இடம் பெயர்வதற்கான காரணங்களாவன.**

(1) உற்பத்தி சாதனங்களின் அளிப்பில் ஏற்படும் மாற்றம் மற்றும்,

(2) தொழில் நுட்ப நிலையில் ஏற்படும் மாற்றம்.

(3) வளங்களின் அளிப்பு அதிகரிப்பதாலும், தொழில்நுட்ப மேம்பாட்டினாலும், காலப்போக்கில் பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றல் அதிகரிக்கலாம்.

www.surabooks.com



## அரசு தேர்வு வினா - விடைகள்

### 1 மதிப்பெண்

**(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பொதுக்கருத்திலிருந்து தனிக்கருத்து பெறும் முறை** *[BEQ; HY-'18]*

(அ) பகுத்தாய்வு முறை (ஆ) தொகுத்தாய்வு முறை
(இ) இயல்புரை அறிவியல்
(ஈ) நெறியுரை அறிவியல்

விடை **(அ) பகுத்தாய்வு முறை**

**2. அடிப்படை பொருளியல் பிரச்சனை அல்லாதது** *[QY-'18]*

(அ) என்ன உற்பத்தி செய்வது
(ஆ) எவ்வாறு உற்பத்தி செய்வது
(இ) யாருக்காக உற்பத்தி செய்வது
(ஈ) சுற்றுச்சூழல் பொருளாதாரம்

விடை **(ஈ) சுற்றுச்சூழல் பொருளாதாரம்**

**3. 'அரசியல் பொருளாதாரம்' என்ற நூலின் ஆசிரியர்** *[QY - '19]*

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்
(இ) A.C. பிகு (ஈ) F.A. வாக்கர்

விடை **(ஆ) மார்ஷல்**

**(ii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. உற்பத்தி என்பது உள்ளீடுகளை வெளியீடுகளாக _______ முறை ஆகும்.** *[BEQ; First Mid - '18]*

(அ) நுகர்வு (ஆ) பகிர்வு
(இ) மாற்றும் (ஈ) பொதுநிலை
(உ) பொதுநிதி

விடை **(இ) மாற்றும்**

**2. ஆய்க்கோஸ் (Oikos) என்றால் _______ என்று பொருள்படும்.** *[BEQ;First Mid - '18]*

(அ) பாலிஸ் (ஆ) நிர்வாகம்
(இ) இல்லங்கள்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

விடை **(இ) இல்லங்கள்**

### 2 மதிப்பெண்கள்

**1. பொருளியலின் பிரிவுகள் யாவை?** *[BEQ; Govt. MQP-'18]*

விடை. (i) நுகர்வு (ii) உற்பத்தி
(iii) பரிமாற்றம் (iv) பகிர்வு

**2. ஏங்கலின் விதி என்றால் என்ன?** *[QY - '19]*

விடை. ஏங்கலின் விதியின்படி, "உணவுப் பண்டங்களுக்காக செலவிடப்படும் செலவின் சதவீதம், மொத்த செலவு (வருமான உயர்வின்போது) அதிகரிக்கும்போது குறையும்".

**3. அங்காடி என்றால் என்ன?** *[BEQ; First Mid - '18]*

விடை.
- ♦ அங்காடி என்பது பொருட்களை வாங்கும், விற்கும் ஓர் இடமாகும்.
- ♦ ஆனால் பொருளியலில் அங்காடி என்பது ஒரு விலையில் பண்டங்களையும், பணிகளையும் பரிமாற்றம் செய்திட விற்பவரும், வாங்குபவரும் இணைவதை குறிக்கும்.

**4. ஒரு சமுதாயத்தில் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகள் யாவை?** *[CRT-'22]*

விடை.
- ♦ என்ன உற்பத்தி செய்வது?
- ♦ எவ்வாறு உற்பத்தி செய்வது.
- ♦ யாருக்காக உற்பத்தி செய்வது?

**5. பண்டங்களை வகைப்படுத்துக.** *[May-'22]*

விடை.
- ♦ இன்றியமையாத பண்டங்கள்.
- ♦ வசதிப் பண்டங்கள்
- ♦ ஆடம்பரப் பண்டங்கள்

**6. பற்றாக்குறை என்றால் என்ன?** *[HY-'23]*

விடை. ஒரு பொருளின் பற்றாக்குறை என்பது ஒரு பொருளின் அளிப்பின் அளவையும் தேவையின் அளவையும் பொருத்து அமைகிறது. மேலும் பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக் கூடியவையாக உள்ளன.

### 3 மதிப்பெண்கள்

**1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் ஏதேனும் மூன்று அனுமானங்களை எழுதுக.** *[BEQ; First Mid - '18]*

விடை. **உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் அனுமானங்கள்:**
- ♦ காலத்தில் மாற்றம் இல்லை. வளைகோட்டின் நெடுகிலும் ஒரே காலம் நிலைத்திருக்கிறது.
- ♦ உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் நிலையானது.
- ♦ சமுதாயத்தில் முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது.

**2. நுண்ணினப் பொருளியலின் முக்கியத்துவத்தை விவரி.** *[BEQ; QY-'18]*

விடை.
- ♦ ஒரு பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிந்துகொள்ள உதவுகிறது.
- ♦ பொருளாதாரக் கொள்கைக்கான கருவிகளைத் தருகிறது.
- ♦ பொருளாதார நலனின் நிலையை பற்றி ஆராய்கிறது.
- ♦ வளங்களை திறன்பட பயன்படுத்த உதவுகிறது.
- ♦ பன்னாட்டு வாணிபத்தில் பயன்படுகிறது.
- ♦ பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுகிறது.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com




- ♦ வளங்களை உத்தம அளவில் பங்கிட பயன்படுகிறது.
- ♦ முன்கணிப்பிற்கு அடிப்படையாக உள்ளது.
- ♦ விலை நிர்ணயம் செய்ய உதவுகிறது.

## 5 மதிப்பெண்கள்

**1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்களை விவரி.** *[QY-'18]*

**விடை. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்கள் :**




- ♦ **தேர்ந்தெடுப்புச் சிக்கல் :**

  வளங்கள் பற்றாக்குறையாகவும், தேவைகள் எண்ணற்றவையாகவும் இருப்பதால் அதிக வருமானம் உள்ள குழுக்களுக்கும் குறைந்த வருமானம் உள்ள குழுக்களுக்கும் இடையே வளங்களைப் பங்கிடுதலில் சிக்கல்கள் எழலாம். உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் பல இணைப்புகள் (பலவாய்ப்புகள்) உள்ளதால் தெரிவு சார்ந்த சிக்கல்கள் எழாது.

- ♦ **பற்றாக்குறை எனும் கருத்து :**

  உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உதவியுடன் பற்றாக்குறை எனும் கருத்தை விளக்கலாம். எந்த ஒரு சமுதாயமும் குறிப்பிட்ட அளவிலான வளங்களை மட்டுமே பெற்றிருப்பதால், இருக்கிற தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்பதை நாம் அறிவோம். வளங்களின் பற்றாக்குறையினால் ஏற்படும் இடர்பாடுகளை உற்பத்தி வாய்ப்பு வளைகோடு பிரதிபலிக்கிறது.

- ♦ **மைய சிக்கல்களுக்கான தீர்வு :**

  பொருளாதாரத்தின் மையமான சிக்கல்களுக்கு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மூலம் விளக்கம் அளிக்க முடியும். எதை எவ்வளவு உற்பத்தி செய்வது என்ற சிக்கலுக்கான தீர்வு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் எந்தப் பகுதியை தேர்ந்தெடுப்பது என்ற முடிவில் அடங்கியுள்ளது.

**2. அடிப்படைப் பொருளியல் சிக்கல்களை விவரி.** *[BEQ; First Mid - '18]*

**விடை. அடிப்படைப் பொருளியல் சிக்கல்கள் :**

- ♦ விருப்பங்கள் எண்ணற்றவை
- ♦ வளங்கள் பற்றாக்குறையானவை
- ♦ இலவசமாக கிடைப்பதல்ல
- ♦ விருப்பங்களின் தெரிவு
- ♦ பொருளியல்

**பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு மக்கள்** எவ்வாறு தங்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார்கள் என்பதைக் கூறுகிறது.

வளங்கள் ஏராளமாகவும், தேவைகள் சிலவாகவும் இருந்தால் பொருளாதாரப் பிரச்சினை இருப்பதில்லை. ஆனால் இத்தகைய சூழ்நிலை ஒருபோதும் இருப்பதில்லை. எப்போதும் வளங்கள் குறைவாகவும் நமது தேவைகள் எண்ணிலடங்காதவையாகவும் இருக்கின்றன. எனவே எல்லாச் சமுதாயத்திலும் சில தெரிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**என்ன உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது?**

எந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? எங்கு உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது? முதலான வினாக்கள் எல்லா சமுதாயங்களிலும் எழுகின்றன. இவற்றிற்கான விடை சில முக்கியமான சிக்கலான முடிவுகளை சார்ந்துள்ளது :

- ♦ உணவு, உடை, வீட்டுப் பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?
- ♦ வேளாண்மைப் பொருட்களை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது தொழிற்சாலைப் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதா?
- ♦ வளங்களை அதிகமாகக் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? அல்லது வளங்களை அதிகமாக ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா?
- ♦ நுகர்வுப் பண்டங்களை அதிகம் வைத்துக் கொள்வதா? அல்லது முதலீட்டுப் பண்டங்களை வைத்துக் கொள்வதா?
- ♦ அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

**எவ்வாறு உற்பத்தி செய்வது?**

ஒவ்வொரு சமுதாயமும் உழைப்புச் செறிவு மிக்க தொழில் நுட்பத்தை அதிகம் பயன்படுத்துவதா? அல்லது, மூலதனச் செறிவு மிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதா? என்பதை முடிவு செய்ய வேண்டும். அதாவது உழைப்பை அதிகம் பயன்படுத்துவதா அல்லது இயந்திரத்தை அதிகம் பயன்படுத்துவதா என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

**யாருக்காக உற்பத்தி செய்வது?**

- ♦ ஒவ்வொரு சமுதாயமும் உற்பத்தி செய்த பண்டங்களைச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு எவ்வாறு பிரித்துக் கொடுப்பது? யார் அதிகம்

www.surabooks.com

www.surabooks.com



பெறுகிறார்கள்? யார் குறைவாகப் பெறுகிறார்கள்? என்பதையும் அறிய வேண்டியுள்ளது. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச நுகர்வுக்காவது பண்டங்களும் பணிகளும் கிடைக்கின்றனவா? என்பதையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது.

♦ ஒரு பொருளாதாரத்தில், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளை தனி மனிதர்களுக்கு ஒதுக்கீடு செய்வது முதலான சிக்கல்களையும் சமுதாயம் சந்திக்க வேண்டிள்ளது.

**3. மார்ஷலின் நல இலக்கணத்தை ஆராய்க.** *[BEQ; First Mid - '18]*

**விடை. நல இலக்கணம் ஆல்ஃபிரட் மார்ஷல் :**

ஆல்ஃபிரட் மார்ஷல் (1842-1924) தன்னுடைய "பொருளியல் கோட்பாடுகள்" (1890) என்ற நூலில் பொருளியலை கீழ்வருமாறு வரையறுத்துள்ளார்:

"அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும்.

பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும், முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது."

**மார்ஷல் வரையறையின் சிறப்பம்சங்கள்:**

♦ அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமானது செல்வமே என்று பொருளியலில் கருதப் படவில்லை.

♦ பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே; அந்தச் சாதாரண மனிதர்கள் அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி, உச்சபட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.

♦ பொருளியல் ஒரு சமூக அறிவியல் ஆகும். அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிப் படிக்கிறது.

**திறனாய்வு :**

♦ மார்ஷல், பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார். அவர் பொருள்சாரா நலனைத் தரக்கூடிய மருத்துவர், ஆசிரியர் போன்றோரது பணிகளைக் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அவர்களது பணிகளும் மனித நலனை மேம்படுத்துகின்றன.

♦ பொருள் சாரா பணிகளுக்கு வெகுமதியாக அளிக்கப்படும் பணத்தினைப் பற்றி, மார்ஷல் தனது கூலிக் கோட்பாட்டில் ஏதும் கூறாமல் புறக்கணித்துவிட்டார்.

♦ மார்ஷலின் இலக்கணமானது நலன் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், நலன் என்பது தெளிவுற வரையறுக்கப்படவில்லை. நலன் என்பது மனிதருக்கு மனிதர், நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் வேறுபடக்கூடியது. மக்கள் நலனை மேம்படுத்தும் மற்றும் மேம்படுத்தாத பொருட்களை பற்றி மார்ஷல் தெளிவாக வேறுபடுத்தி காட்டியுள்ளார்.

♦ எனினும், நலன் என்பது தனி மனிதனோ அல்லது மனிதர்களின் குழுவோ மகிழ்ச்சியாகவோ அல்லது வசதியாகவோ வாழ்வதாகும். தனிமனிதனின் நலன் அல்லது நாட்டின் நலனானது அந்த நாடு கொண்டுள்ள செல்வ இருப்பை மட்டுமே சார்ந்தது அல்ல. அது அந்நாட்டின் அரசியல், சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளையும் சார்ந்ததாகும்.

**4. பொருளியலின் வகைகளை விவரிக்கவும்.** *[HY - '19]*

**விடை. பொருளியலின் வகைகள் :**

**நுண்ணியல் பொருளியல் :**

தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியல் எனப்படும்.

**பேரியல் பொருளாதாரம் :**

பேரியல் பொருளியல் நுண்ணியல் பொருளியலில் இருந்து சற்று மாறுபட்டது. இது ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளை விளக்குகிறது. நாட்டு உற்பத்தி, பண வீக்கம், வேலையின்மை மற்றும் வரி போன்ற பல ஒட்டுமொத்தங்களைப் பற்றி படிக்கிறது.

**பன்னாட்டுப் பொருளாதாரம் :**

நவீன உலகில் எந்த ஒரு நாடும் தனிப்பட்ட நிலையில் வளர்ச்சி அடைய இயலாது என்று கருதப்படுகிறது. வெளிநாட்டு மூலதனம், முதலீடு (வெளிநாட்டு நேரடி முதலீடு) மற்றும் பன்னாட்டு வாணிபத்தின் மூலம் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளோடு தொடர்பு கொண்டுள்ளன. இவற்றை பன்னாட்டுப் பொருளியல் விளக்குகிறது.

**பொது நிதிப் பொருளாதாரம் :**

பொதுநிதி என்பது வருமானம் அல்லது வருவாயை அதிகரிக்க பொது அதிகார அமைப்புகள் ஒன்றோடொன்று இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கையை விளக்குகிறது. பொதுச் செலவு, பொது வருவாய், பொதுக் கடன் மற்றும் நிதி நிருவாகம் போன்றவை பொதுநிதியின் எல்லைகளாகும்.

**வளர்ச்சிப் பொருளாதாரம் :**

தலா வருமானம், மனித மேம்பாட்டு குறியீடு, மகிழ்ச்சி குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள்

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**சுகாதாரப் பொருளாதாரம் :**

சுகாதாரப் பொருளாதாரம் என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும். இது சுகாதாரக் குறியீடுகள், நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கும் நடவடிக்கைகள், மருத்துவ ஆராய்ச்சி, கல்வி, கிராமப்புற சுகாதாரப் பணி, மருந்து விலை கட்டுப்பாடு, மகப்பேறுக்குப் பின்னரான தொடர்பான பாதுகாப்பு, மகப்பேறு, குழந்தை சுகாதாரம், சுகாதாரத்திற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**சுற்றுச்சூழல் பொருளாதாரம் :**

இயற்கை வளங்களின் இருப்பை சுரண்டுதல் மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஆகியன விரைவான பொருளாதார முன்னேற்றத்தின் விளைவான தீய விளைவுகளாகும். எனவே பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள உறவை ஆராயும் சுற்றுச்சூழல் பொருளாதாரத்தைப் படிப்பதும் அவசியமாகும்.

**5. பொருளியலின் பல்வேறு பிரிவுகளை விவரிக்கவும்.** *[QY - '19; May-'22]*

**விடை.** பொருளியல், நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு ஆகிய உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

♦ **நுகர்வு :** மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு, பொருளாதார நடவடிக்கையின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது. மனித விருப்பங்களின் இயல்புகளின் அடிப்படையில், நுகர்வோரின் நடத்தை, குறைந்துசெல் பயன்பாடு, நுகர்வோரின் உபரி ஆகிய பல விதிகள் விளக்கப்பட்டுள்ளன.

♦ **உற்பத்தி :** உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும். நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு மேலும் உள்ளீடு, வெளியீடுகளுக்கு இடையேயான உறவு ஆகியன இப்பிரிவில் இடம் பெற்றுள்ளன.

♦ **பரிமாற்றம் :** பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது. உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் நுகர்வோரின் கைகளுக்கு கிடைக்கின்றபோதுதான் நுகர்வு சாத்தியமாகிறது.

♦ **பகிர்வு :** உற்பத்தி என்பது உற்பத்திக் காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும். பகிர்வு என்னும் பகுதி உற்பத்தி காரணிகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுவதை விளக்குகிறது.

## கூடுதல் வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையைத் தெரிவு செய்க: 1 மதிப்பெண்**

**(i) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பொருளாதாரத்தின் வேறு பெயர்** *[BEQ]*

(அ) இந்தியப் பொருளாதாரம்
(ஆ) அரசியல் பொருளாதாரம்
(இ) வணிகப் பொருளாதாரம்
(ஈ) கலப்பு பொருளாதாரம்

**விடை (ஆ) அரசியல் பொருளாதாரம்**

**2. புதிய பொருளாதாரத்தின் தந்தை யார்?**

(அ) மார்க்ஸ் முல்லர் (ஆ) ஆடம்ஸ்மித்
(இ) J.M. கீன்சு (ஈ) கார்ல் மார்க்ஸ்

**விடை (இ) J.M. கீன்சு**

**3. பேரியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?**

(அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்
(ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
(இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
(ஈ) விலைக் கோட்பாடு

**விடை (அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்**

**4. "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்று கூறியவர்**

(அ) ஆடம்ஸ்மித் (ஆ) இலயனல் ராபின்ஸ்
(இ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஈ) சாமுவேல்சன்

**விடை (அ) ஆடம்ஸ்மித்**

**5. 'நலஇயல்' என்பது**

(அ) மகிழ்ச்சி
(ஆ) தனி மனிதனின் நலம்
(இ) ஒட்டுமொத்த மக்களின் நலம்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை (ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**6. "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய ஒரு பொதுக் கோட்பாடு" என்னும் நூல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு**

(அ) 1930 (ஆ) 1936 (இ) 1988 (ஈ) 1990

**விடை (ஆ) 1936**

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



7. "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய ஒரு பொதுக் கோட்பாடு" என்னும் நூலை அறிமுகப்படுத்தியவர்

(அ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஆ) ஆடம் ஸ்மித்
(இ) இராபின்ஸ் (ஈ) J.M. கீன்சு

விடை **(ஈ) J.M. கீன்சு**

8. **பொருளியல் குறிப்பிடுவது**

(அ) பற்றாக்குறை வளங்களும் குறிப்பிட்ட விருப்பங்களும்
(ஆ) மனித விருப்பமும் நிறைவடைதலும்
(இ) செல்வத்திற்கும் சேமிப்பிற்கும் உள்ள தொடர்பு
(ஈ) அரசு மேலாண்மை

விடை **(ஆ) மனித விருப்பமும் நிறைவடைதலும்**

9. **'இயங்கா' நிலை என்பது**

(அ) கணிதம்
(ஆ) வணிகக் கணிதம்
(இ) மாற்றங்கள் ஏற்படாத காலம்
(ஈ) எதுவுமில்லை

விடை **(இ) மாற்றங்கள் ஏற்படாத காலம்**

10. **ஆடம்ஸ்மித் நாடுகளின் செல்வம் என்ற புத்தகத்தை வெளியிட்ட ஆண்டு**

(அ) 1776 (ஆ) 1786 (இ) 1886 (ஈ) 1766

விடை **(அ) 1776**

(ii) **பட்டியல் I-ல் உள்ளவற்றை பட்டியல் II-உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.**

1.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | ஆடம் ஸ்மித் | i | வளர்ச்சி இலக்கணம் |
| ஆ. | ஆல்ஃபிரடு மார்ஷல் | ii | பற்றாக்குறை இலக்கணம் |
| இ. | இலயனல் இராபின்ஸ் | iii | நல இலக்கணம் |
| ஈ | சாமுவேல்சன் | iv | செல்வ இலக்கணம் |

(1) அ-iv ஆ-iii இ-ii ஈ-i
(2) அ-i ஆ-ii இ-iii ஈ-iv
(3) அ-ii ஆ-iii இ-iv ஈ-i
(4) அ-iii ஆ-iv இ-i ஈ-ii

விடை **(1) அ-iv ஆ-iii இ-ii ஈ-i**

2.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | நுகர்வு | i | உள்ளதை உள்ளவாறு கூறுகிறது |
| ஆ. | இயல்புரை அறிவியல் | ii | விலைக் கோட்பாடு |
| இ. | பகுத்தாய்வு முறை | iii | பொருளாதார நடவடிக்கையின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது. |
| ஈ | நுண்ணினப் பொருளாதாரம் | iv | பொது கருத்திலிருந்து தனிக் கருத்தை பெறுவது |

(1) அ-i ஆ-ii இ-iii ஈ-iv
(2) அ-iv ஆ-iii இ-ii ஈ-i
(3) அ-iii ஆ-i இ-iv ஈ-ii
(4) அ-ii ஆ-iv இ-i ஈ-iii

விடை **(3) அ-iii ஆ-i இ-iv ஈ-ii**

3.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | தொன்மை காலம் | i | சாமுவேல்சன் |
| ஆ. | புதிய தொன்மை காலம் | ii | இயனல் இராபின்ஸ் |
| இ. | புதிய யுகம் | iii | ஆல்ஃபிரட் மார்ஷல் |
| ஈ | நவீன யுகம் | iv | ஆடம்ஸ்மித் |

(1) அ-ii ஆ-iii இ-i ஈ-iv
(2) அ-iv ஆ-iii இ-ii ஈ-i
(3) அ-iii ஆ-i இ-iv ஈ-ii
(4) அ-iii ஆ-ii இ-i ஈ-iv

விடை **(2) அ-iv ஆ-iii இ-ii ஈ-i**

4.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | உற்பத்தி | i | அறிவுப் பயன்பாடு |
| ஆ. | பயன்பாடு | ii | தொலைக்காட்சி |
| இ. | சமநிலை | iii | பண்டத்தின் தேவை அளவும், அளிப்பின் அளவும் சமம் |
| ஈ | நுகர்வோர் பண்டம் | iv | பொருளாதாரத்தின் பாடப்பொருள் |

(1) அ-ii ஆ-iv இ-i ஈ-iii
(2) அ-iv ஆ-iii இ-ii ஈ-i
(3) அ-iv ஆ-i இ-iii ஈ-ii
(4) அ-i ஆ-iv இ-ii ஈ-iii

விடை **(3) அ-iv ஆ-i இ-iii ஈ-ii**

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



5.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | நாடுகளின் செல்வம் | i | இருவேறு பண்டங்களின் எண்ணிடலங்கா உற்பத்தி வாய்ப்பு |
| ஆ. | பேரினப் பொருளியல் | ii | செயலி முறை |
| இ. | உற்பத்தி வாய்ப்பு வளைகோடு | iii | வருவாய் கோட்பாடு |
| ஈ | தொகுத்தாய்வு | iv | 1776 |

(1) அ-iv ஆ-ii இ-iv ஈ-iii
(2) அ-iv ஆ-iii இ-ii ஈ-i
(3) அ-i ஆ-ii இ-iii ஈ-iv
(4) அ-iv ஆ-iii இ-i ஈ-ii

**விடை (4) அ-iv ஆ-iii இ-i ஈ-ii**

6.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ. | 1723 | i | பொருளாதார கோட்பாடு |
| ஆ. | 1842 | ii | பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் ஓர் கட்டுரை |
| இ. | 1932 | iii | ஆடம்ஸ்மித் பிறப்பு |
| ஈ | 1890 | iv | ஆல்ஃபிரட் மார்ஷல் பிறப்பு |

(1) அ-ii ஆ-iii இ-iv ஈ-i
(2) அ-iii ஆ-iv இ-ii ஈ-i
(3) அ-iv ஆ-i இ-ii ஈ-iii
(4) அ-iii ஆ-iv இ-i ஈ-ii

**விடை (2) அ-iii ஆ-iv இ-ii ஈ-i**

**(iii) கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. TR = ________.

(அ) P + Q (ஆ) P – Q (இ) P | Q (ஈ) P × Q

**விடை (ஈ) P × Q**

2. **_______ என்பது செல்வத்தை உருவாக்குதல் என்று பொருள்படும்.** *[BEQ]*

(அ) உற்பத்தி (ஆ) நுகர்வு
(இ) பகிர்வு (ஈ) பொதுநிதி

**விடை (அ) உற்பத்தி**

3. **_______ என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும்.** *[BEQ]*

(அ) சுற்றுச் சூழல்
(ஆ) பொருளாதாரம்
(இ) வளர்ச்சி பொருளாதாரம்
(ஈ) சுகாதாரப் பொருளாதரம்

**விடை (ஈ) சுகாதாரப் பொருளாதரம்**

4. **நோமோஸ் (Nomos) என்றால் _______ என்று பொருள்படும்.**

(அ) பாலிஸ் (ஆ) நிருவாகம்
(இ) இல்லங்கள் (ஈ) எதுவுமில்லை

**விடை (ஆ) நிருவாகம்**

5. **பொருளியல் என்ற சொல் ______ சொல்லிலிருந்து வந்தது.**

(அ) இலத்தீன் (ஆ) பழமையான கிரேக்க
(இ) ஸ்பேனிஸ் (ஈ) பிரிட்டன்

**விடை (ஆ) பழமையான கிரேக்க**

6. **பொருளாதாரம் என்பது _______ அறிவியலாகும்.**

(அ) சமூக (ஆ) நீதி
(இ) இயற்பியல் (ஈ) இயற்கை

**விடை (அ) சமூக**

7. **_______ பொருளியல் எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல்.**

(அ) இயல்புரை (ஆ) நெறியுரை
(இ) எதிர்மறை (ஈ) எதுவுமில்லை

**விடை (ஆ) நெறியுரை**

8. **_______ மாற்றக்கூடியவை ஆகும்.**

(அ) பண்டங்கள் (ஆ) பொருட்கள்
(இ) சரக்குகள்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை (ஈ) மேற்கூறிய அனைத்தும்**

9. **மூலதனப் பண்டங்கள் _______ பண்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன.**

(அ) நுகர்வு (ஆ) உற்பத்தி
(இ) இலவச (ஈ) எதுவுமில்லை

**விடை (ஆ) உற்பத்தி**

10. **_______ பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி பெறும் அறிவாகும்.**

(அ) இடம் (ஆ) கால (இ) அறிவு (ஈ) சேவை

**விடை (இ) அறிவு**

11. **பகுத்தாய்வு முறையை _______ என்று அழைக்கப்படுகிறது.**

(அ) பகுத்தறியும் முறை (ஆ) கருத்திலான முறை
(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) எதுவுமில்லை

**விடை (இ) (அ) மற்றும் (ஆ)**

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**12. தொகுத்தாய்வுமுறை_______என்று அழைக்கப்படுகிறது.**

(அ) பகுத்தறியும் முறை (ஆ) கருத்திலான முறை
(இ) செயலறி முறை
(ஈ) மேற்காணும் அனைத்தும்

விடை **(இ) செயலறி முறை**

**13. _______ என்பது பண்டங்களையும், பணிகளையும் பயன்படுத்துவதாகும்.**

(அ) உற்பத்தி (ஆ) நுகர்வு
(இ) பகிர்வு (ஈ) பொது நிதி

விடை **(ஆ) நுகர்வு**

**14. _______ என்பது உற்பத்தி காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.**

(அ) உற்பத்தி (ஆ) பரிமாற்றம்
(இ) பகிர்வு (ஈ) நுகர்வு

விடை **(இ) பகிர்வு**

**15. நுண்ணியல் என்பது _______ ஆகும்.**

(அ) சிறிய (ஆ) பெரிய
(இ) ஒட்டுமொத்த (ஈ) அனைத்தும்

விடை **(அ) சிறிய**

**16. பேரியல் என்பது _______ ஆகும்.**

(அ) சிறிய (ஆ) மிகச்சிறிய
(இ) பெரிய (ஈ) எதுவுமில்லை

விடை **(இ) பெரிய**

**17. அரசின் நிறுவனங்கள், அரசின் பணிகள் மற்றும் அரசின் இயந்திரங்களோடு சார்ந்த நிதி நடவடிக்கைகளே _______ ஆகும்.**

(அ) நிதி நிர்வாகம் (ஆ) பொது நிதி
(இ) அரசு (ஈ) எதுவுமில்லை

விடை **(ஆ) பொது நிதி**

**18. அளவியல் பொருளாதாரம் _______ பாடங்களை உள்ளடக்கியது ஆகும்.**

(அ) கணிதம், அறிவியல், பொருளியல்
(ஆ) பொருளியல், வணிகவியல், கணிதம்
(இ) புள்ளியியல், கணிதம், பொருளியல்
(ஈ) புள்ளியியல், அறிவியல், கணிதம்

விடை **(இ) புள்ளியியல், கணிதம், பொருளியல்**

### (iv) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றைக் கண்டறி.

**1. கீழ்க்கண்டவற்றுள் எது பேரியல் பொருளாதாரம் சாராதது?**

(அ) கடந்த ஆண்டு பொது விலை 8% அதிகரித்துள்ளது.
(ஆ) தக்காளியின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.
(இ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 33% அதிகரித்துள்ளது.
(ஈ) கடந்த ஆண்டு 10% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலையைப் பெற்றுள்ளது.

விடை **(ஆ) தக்காளியின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது**

**2. பொருந்தாத ஒன்றை கண்டறிக.**

(அ) உற்பத்தி (ஆ) நுகர்வு
(இ) பகிர்வு (ஈ) இடப் பயன்பாடு

விடை **(ஈ) இடப் பயன்பாடு**

**காரணம்:** இடப்பயன்பாடு பயன்பாட்டின் வகைகளுள் ஒன்று. மற்ற மூன்றும் பொருளியலின் உட்பிரிவுகளாகும்.

**3. கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?**

(அ) அரிசியின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது
(ஆ) தற்பொழுது நாட்டு வருமானம் 5% அதிகரித்தது.
(இ) நடப்பு ஆண்டில் பொது விலை 5% அதிகரித்துள்ளது.
(ஈ) கடந்த ஆண்டு 7.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைப் பெற்றுள்ளது.

விடை **(அ) அரிசியின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது**

**4. பொருந்தாத ஒன்றை கண்டறிக.**

(அ) இடப் பயன்பாடு (ஆ) காலப் பயன்பாடு
(இ) உடமைப் பயன்பாடு (ஈ) பகுத்தாய்வு முறை

விடை **(ஈ) பகுத்தாய்வு முறை**

**காரணம்:** பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும். மற்ற மூன்றும் பயன்பாட்டின் வகைகளாகும்.

**5. கீழ்க்கண்டவற்றில் எது மூலதன பண்டம்**

(அ) இயந்திரம் (ஆ) தொலைக்காட்சி
(இ) வைரம் (ஈ) மேசை

விடை **(அ) இயந்திரம்**

**6. கீழ்க்கண்டவற்றில் எது சமநிலை விலையுடன் தொடர்பு அல்லாதது**

(அ) தேவை அளவும் அளிப்பு அளவும் சமம்
(ஆ) தேவைக் கோடும் அளிப்புக் கோடும் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளும்
(இ) விலை அதிகரிக்கும் போது தேவை குறைகிறது
(ஈ) நிலையான சமநிலை

விடை **(இ) விலை அதிகரிக்கும் போது தேவை குறைகிறது**

www.surabooks.com



**(v) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்துகிறது?**

**1.**

| | | | |
|---|---|---|---|
| அ. | பேரியல் பொருளாதாரம் | – | ஒட்டுமொத்த உற்பத்தி |
| ஆ. | நுண்ணினப் பொருளியல் | – | நாட்டு வருமானம் |
| இ. | உற்பத்தி வாய்ப்பு வளைகோடு | – | பயன்பாட்டை உருவாக்குதல் |
| ஈ | பகிர்வு | – | பொருளாதார நடவடிக்கை |

**விடை (அ) பேரியல் பொருளாதாரம் - ஒட்டுமொத்த உற்பத்தி**

**2.**

| | | | |
|---|---|---|---|
| அ. | விலை | – | மூலப்பொருட்களின் மதிப்பு |
| ஆ. | வேலைவாய்ப்பு வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு | – | மார்ஷல் |
| இ. | பரிமாற்றம் | – | வேலைபகுப்பு முறை |
| ஈ | சேவை பயன்பாடு | – | நோயாளி மருத்துவரிடமும் பெறுகின்ற சேவை |

**விடை (ஈ) சேவை பயன்பாடு - நோயாளி மருத்துவரிடமும் பெறுகின்ற சேவை**

**(vi) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?**

**1.**

| | | | |
|---|---|---|---|
| அ. | உடைமைப் பயன்பாடு | – | பயன்பாட்டின் வகைகள் |
| ஆ. | தொகுத்தாய்வு முறை | – | பொருளியல் ஆய்வு முறை |
| இ. | பற்றாக்குறை இலக்கணம் | – | இலயனல் ராபின்ஸ் |
| ஈ | மார்ஷல் | – | செல்வ இலக்கணம் |

**விடை (ஈ) மார்ஷல் - செல்வ இலக்கணம்**

**2. பொருந்தாத ஒன்றை கண்டறிக.**

| | | | |
|---|---|---|---|
| அ. | அழியும் பண்டம் | – | பழங்கள் மற்றும் பூ |
| ஆ. | புலனாகப் பொருட்கள் | – | உருவ அடையாளம் |
| இ. | பண வருமானம் | – | பெயரளவு வருமானம் |
| ஈ | தொகுத்தாய்வு முறை | – | வரலாற்றுப் பள்ளி |

**விடை (ஆ) புலனாகப் பொருட்கள் - உருவ அடையாளம்**

**(vii) கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க.**

**1. கூற்று (A) : பொருளியல் பண்டங்களுக்கு மாற்று (பண) மதிப்பு உண்டு.**

**காரணம் (R): பொருளியல் பண்டங்கள் பற்றாக்குறையானவை.**

அ) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் Aக்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் Aக்கான சரியான விளக்கம் R இல்லை.


இ) A சரி. ஆனால் R தவறு.

ஈ) A தவறு. ஆனால் R சரி.

**விடை (அ) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் Aக்கான சரியான விளக்கம் R**

**(viii) சரியான கூற்றைக் கண்டறி.**

**1.**




**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு இடம்பெயர்வதற்கான காரணம்.**

**(i) உற்பத்தி சாதனங்களின் அறிப்பு.**


**(ii) நிலையான உற்பத்தி**

(அ) (i) சரி (ii) தவறு (ஆ) (i) மற்றும் (ii) சரி

(இ) (i) தவறு (ii) சரி (ஈ) (i) மற்றும் (ii) தவறு

**விடை (அ) (i) சரி (ii) தவறு**

**2. பின்வரும் PPf வரைபடத்தைக் காண்க. (உற்பத்தி சார்பு)**




**PPf படத்தில் காட்டப்பட்டுள்ளது.**

**A ல் இருந்து B க்கு நகர்கையில் வாய்ப்புச் செலவு யாது?**

(அ) 5 ஆரஞ்சு (ஆ) 10 ஆப்பிள்

(இ) 5/10 ஆப்பிள் (ஈ) 10/5 ஆரஞ்சு

**விடை (ஈ) 10/5 ஆரஞ்சு**

www.surabooks.com

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

## பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.** **2 மதிப்பெண்கள்**

**1. பொருளியல் தலைப்புகளில் காணப்படும் பல நூல்கள் யாவை?**

விடை. **பொருளியல் பாடத்திற்கு**

♦ பொருளியலின் அறிமுகம்.

♦ பொருளியல் ஓர் அறிமுகம்.

♦ அடிப்படைப் பொருளியல்.

♦ பொருளியலின் கூறுகள்.

♦ தொடக்கப் பொருளியல்.

♦ பொருளியலின் அடிப்படைகள்

முதலான தலைப்புகளில் பொருளியல் நூல்கள் பல காணக் கிடைக்கின்றன.

**2. ஆடம் ஸ்மித்தின் செல்வ இலக்கணத்தை குறை கூறியவர்கள் யார்?**

விடை. ♦ 'இரஸ்கின் மற்றும் கார்லைல்' போன்றோர், நீதிநெறிக்கு புறம்பான சுயநலத்தைக் கற்றுத் தருவதாக பொருளியலை வர்ணிக்கின்றனர்.

♦ எனவே பொருளியலை ஓர் **"இருண்ட அறிவியல்"** (Dismal Science) எனக் கூறியுள்ளனர்.

**3. இராபின்ஸ் இலக்கணத்தின் முக்கிய சிறப்பியல்புகள் யாவை?**

விடை. ♦ மனிதர்கள் எல்லையற்ற தேவைகளை உடையவர்கள்.

♦ மனிதர்களின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்கள் பற்றாக்குறையாகவே உள்ளன.

♦ பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக்கூடியவையாக உள்ளன.

♦ எனவே இராபின்ஸ் கூற்றுப்படி பொருளியல் என்பது தேவைகளைத் தேர்வு செய்யும் அறிவியலாகும்.

**4. இலவசப் பண்டங்கள் மற்றும் பொருளாதாரப் பண்டங்களை வேறுபடுத்துக.**

விடை.

| வ. எண் | இலவசப் பண்டங்கள் | பொருளாதாரப் பண்டங்கள் |
|---|---|---|
| 1 | இயற்கையின் நன்கொடையாக கிடைக்கும் பண்டம் இலவச பண்டம். | பணம் கொடுத்து பெறும் பண்டம் பொருளாதாரப் பண்டம். |
| 2 | பற்றாக்குறையற்றவை, மேலும் சந்தையில் விலை இல்லை. | பற்றாக்குறையானவை மேலும் சந்தையில் விலை உண்டு. |
| 3 | (எ. கா.) காற்று, சூரிய ஒளி. | (எ.கா.) மேசை, நாற்காலி. |

## பகுதி - இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.** **3 மதிப்பெண்கள்**

**1. நுகர்வுப் பண்டத்தையும் மூலதனப் பண்டத்தையும் வேறுபடுத்துக.** *[BEQ]*

விடை.

| வ. எண் | நுகர்வுப் பண்டங்கள் | மூலதனப் பண்டங்கள் |
|---|---|---|
| 1 | நுகர்வோர் பண்டங்கள் என்பன நேரடியாக மனித விருப்பங்களை நிறைவேற்றுவதாகும். | மூலதனப் பண்டங்கள் என்பவை நேரடியாக நுகர்வோருக்கு மனநிறைவு தருவதில்லை. |
| 2 | (எ.கா.) தொலைக்காட்சி. | (எ.கா.) இயந்திரங்கள். |

**2. மார்ஷல் நல இலக்கண வரையறையின் சிறப்பம்சங்களை விவரி.**

விடை. ♦ அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமானது செல்வமே என்று பொருளியலில் கருதப்படவில்லை, மாறாக மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான்.

♦ பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே, அந்தச் சாதாரண மனிதர்கள் அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி, உச்ச பட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.

♦ பொருளியல் ஒரு சமூக அறிவியலாகும். அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிப் படிக்கிறது.

www.surabooks.com



**3. பகுதிச் சமநிலைக்கும் பொதுச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

விடை. (1) **பகுதிச் சமநிலை :** ஒரேயொரு மாறியின் மூலம் கிடைக்கக்கூடிய சமநிலை பகுதிச் சமநிலை எனப்படும். இது **தனிச் சமநிலை** என்றும் அழைக்கப்படுகிறது.

(2) **பொதுச் சமநிலை :** பொதுச் சமநிலை என்பது பொருளாதாரத்தில் செயல்படுகின்ற அனைத்து மாறிகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மொத்த பொருளாதாரத்திலும் சமநிலை ஏற்படுவதைக் குறிக்கின்றது.

## பகுதி - ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**5 மதிப்பெண்கள்**

**1. பயன்பாட்டின் இயல்புகள் யாவை? விளக்குக.**

விடை. **பயன்பாட்டின் இயல்புகள் :**

- **பயன்பாடு உளவியல் சார்ந்தது :** இது நுகர்வோரின் மனநிலையை சார்ந்தது.

  (எ.கா.) சைவ உணவு உட்கொள்பவருக்கு இறைச்சி பயன்பாட்டைக் கொடுக்காது.

- **பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல :** (எ.கா) புகைப்பழக்கம் உள்ளவருக்கு சிகரெட்டிலிருந்து பயன்பாடு கிடைத்தாலும் அவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

- **பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல :** (எ.கா.) நோயுற்ற ஒருவர் மருந்து எடுத்துக் கொள்ளும் போது பயன்பாடு கிடைத்தாலும், நிச்சயமாக அது மனமகிழ்வை தராது எனலாம்.

- **பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும் :** ஒருவர், ஒரே விதமான பண்டத்திலிருந்து பெறும் பயன்பாடானது இடம் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும். ஓர் உணவு தரும் பயன்பாடு அந்த உணவை அருந்தும் சூழலைப் பொருத்தும் அமையலாம்.

- **பயன்பாடானது மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது :** ஒரு நுகர்வோர் குறைந்து செல் பயன்பாட்டை எதிர்கொள்வார்.

- **பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும் :** அதனை துல்லியமாக அளவிடவோ எண்ணிக்கையிடவோ முடியாது.

- **பயன்பாடு நீதிநெறி, ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல :** (எ.கா) கத்தியை சமையல்காரர் காய்கறிகளை வெட்டப் பயன்படுத்துகிறார். கொலைகாரன் தனது எதிரியை தாக்கப் பயன்படுத்துகிறான். மனிதனின் விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டம் மட்டுமே பயன்பாடு கொண்டுள்ளது என பொருளியலில் கருதப்படுகிறது.

**2. பயன்பாட்டின் வகைகள் யாவை? விளக்குக.**

விடை. **பயன்பாட்டின் வகைகள் :**

- **வடிவப் பயன்பாடு :** ஒரு பண்டம் அல்லது பணி ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் கிடைக்கும்போது தான் நுகர்வோர் பயன்பாட்டைப் பெறுகிறார். மூலப் பொருட்கள் உண்மை வடிவத்தில் இருக்கும்போது ஒரு நுகர்வோருக்குப் பயன்பாட்டை தராமல் இருக்கலாம். ஆனால் அவற்றை முடிவுற்ற பண்டமாக மாற்றும்போது அவை அவருக்குப் பயன்பாட்டை தருகின்றன. (எ.கா.) பருத்தி மூலப் பொருளாக இருக்கும்போது நுகர்வோருக்குப் பயன்பாட்டை தருவதில்லை. ஆனால் அதை துணியாக மாற்றும்போது, துணி நுகர்வோருக்குப் பயன்பாட்டைத் தருகிறது.

- **காலப் பயன்பாடு :** ஒருவரிடம் இரத்தத்தை தானமாக பெறுகிறபோது, மற்றொரு நோயாளி பயன்பாட்டைப் பெறுவதில்லை. ஆனால் சிகிச்சையின் போது அதன் பயன்பாட்டை அடைகிறான். அதாவது இரத்தத்தைப் பயன்படுத்துகின்றபோது பயன்பாட்டைப் பெறுகிறான்.

- **இடப் பயன்பாடு :** ஒரு மாணவன் புத்தகம் தயாரிக்கும் இடத்தில் (உற்பத்தி மையம்) வேலை செய்யும்போது, புத்தகத்தின் பயன்பாட்டைப் பெறுவதில்லை. ஆனால் அவன் கல்வி கற்குமிடத்தில (நுகர்வு மையம்) புத்தகத்தின் பயன்பாட்டைப் பெறுகிறான்.

- **சேவைப் பயன்பாடு :** ஒரு நுகர்வோர் தேவையான நேரத்தில் தேவைப்படுகிற பணியினைப் பெறும்போது சேவைப் பயன்பாட்டைப் பெறுகிறார். (எ.கா.) சேவைப் பணியை வழக்குத் தொடுத்தவர் வழக்குரைஞரிடமும், நோயாளி மருத்துவரிடமும் பெறுகிறார்கள்.

- **உடைமைப் பயன்பாடு :** ஒரு மாணவன் புத்தக விற்பனையாளரிடமிருந்து புத்தகம் அல்லது அகராதியை வாங்கும்போது மட்டுமே உடைமைப் பயன்பாட்டை அடைகிறான்.

- **அறிவுப் பயன்பாடு :** அறிவுப் பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி பெறும் அறிவாகும். விளம்பரம் மூலமாக ஒரு பொருளைப் பற்றிய தகவல் அறியப்படுகிறது. அந்த தகவல் சீர்படுத்துவதாகவும் அமையலாம். சீர்கெடுப்பதாகவும் அமையலாம். அது சீர்படுத்துவதாக அமைந்தால் அதிலிருந்து பயன்பாடு பெறப்படுகிறது என்று கொள்ளலாம்.

❖ ❖ ❖

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

இயல்
# 2 நுகர்வுப் பகுப்பாய்வு

## பொருளடக்கம்



2.1 அறிமுகம்
2.2 மனித விருப்பங்கள்
2.3 மனித விருப்பங்களின் பண்புகள்
2.4 பண்டங்களின் வகைகள்
2.5 எண்ணளவை பயன்பாட்டு ஆய்வு
 2.5.1 குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
2.6 சம இறுதிநிலை பயன்பாட்டு விதி
2.7 நுகர்வோர் உபரி
2.8 தேவை விதி
 2.8.1 தேவையின் பண்புகள்
 2.8.2 தேவைச் சார்பு
 2.8.3 தேவை விதி
 2.8.4 தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள்
 2.8.5 தேவை விதியின் விதிவிலக்குகள்
 2.8.6 தேவை விதியின் விதிவிலக்கிற்கான காரணங்கள்
 2.8.7 தேவை விரிவும் தேவைச் சுருக்கமும்
 2.8.8 தேவை ஒரே வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல்
 2.8.9 தேவை வளைகோடு இடப்பெயர்வு
2.9 தேவை நெகிழ்ச்சி
 2.9.1 தேவை நெகிழ்ச்சியின் வகைகள்
 2.9.2 விலைத் தேவை நெகிழ்ச்சி அளவுகள்
 2.9.3 தேவை நெகிழ்ச்சியைத் தீர்மானிப்பவை
 2.9.4 தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள்
 2.9.5 தேவை நெகிழ்ச்சியின் முக்கியத்துவம்
2.10 தரவரிசை ஆய்வு
2.11 சமநோக்கு வளைகோடு
2.12 சமநோக்கு வரைபடம்
2.13 குறைந்து செல் இறுதிநிலை பதிலீட்டு வீதம்
2.14 சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள்
2.15 விலைக்கோடு அல்லது வரவு செலவுக் கோடு
2.16 நுகர்வோர் சமநிலை
2.17 தொகுப்புரை




enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com






enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

## முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பொருளியல் நடவடிக்கை** | : | பொருளியல் நடவடிக்கையின் ஒரே நோக்கம் நுகர்வே ஆகும். |
| **மனித விருப்பங்கள்** | : | பண்டத்தை வாங்கும் செயலும் நுகரும் செயலும் மனித விருப்பத்தைச் சார்ந்தது. |
| **இன்றியமையாத பண்டங்கள்** | : | மனிதன் உயிர் வாழத் தேவையான, தவிர்க்க முடியாத பண்டங்கள் இன்றியமையாத பண்டங்கள் ஆகும். |
| **வசதிப் பண்டங்கள்** | : | நம்முடைய வாழ்வை எளிதாக, சுகமாக, வசதியாக வைத்துக் கொள்ளும் பண்டங்கள் வசதிப் பண்டங்கள் ஆகும். |
| **ஆடம்பரப் பண்டங்கள்** | : | சில வகைப்பண்டங்கள் மிக முக்கியமானவை அல்ல ஆனால் அவற்றின் விலை மிக உயர்ந்தவை இவ்வகை பண்டங்கள் ஆடம்பரப் பண்டங்கள் ஆகும். |
| **பயன்பாடு** | : | பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள், பணிகளின் சக்தியே பயன்பாடு எனப்படும். |
| **மொத்த பயன்பாடு** | : | ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாட்டின் கூடுதலே மொத்த பயன்பாடு ஆகும். |
| **இறுதி நிலைப் பயன்பாடு** | : | கூடுதலாக ஓர் அலகு நுகர்வதால், மொத்தப்பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் அல்லது மாற்றமே இறுதிநிலைப் பயன்பாடு ஆகும். |
| **சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி** | : | சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி நுகர்வோர் எவ்வாறாக தனது குறைந்த வருமானத்தைப் பல பண்டங்களின் நுகர்விற்காக செலவு செய்து உச்சப்பயன்பாட்டைப் பெறுகிறார் என்று விளக்குகிறது. |
| **நுகர்வோர் உபரி** | : | நுகர்வோர் எச்சம் (அ) உபரி என்பது பண்டங்களின், பயன்பாட்டின் அனுபவத்தைச் சார்ந்ததாகும். ஒரு பொருளுக்கு கொடுக்க நினைக்கும் விலைக்கும், உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் உபரி ஆகும். |
| **தேவை விதி** | : | ஒரு பொருளுக்கான தேவை என்பது அப்பொருளை வாங்குவதற்கான விருப்பத்தையும், போதிய சக்தியையும், வாங்கிட வேண்டும் என்ற எண்ணத்தையும் குறிக்கும். |
| **தேவை விதியின் விதிவிலக்குகள்** | : | பொதுவான தேவைகோடு கீழ்நோக்கி சரியும், ஆனால் சில விதிவிலக்கு காரணமாக தேவை கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும் இது விதிவிலக்கான தேவைக்கோடு என அழைக்கப்படுகிறது. |
| **கிஃபன் முரண்பாடு (Giffen Paradox)** | : | கிஃபன் பண்டங்கள் தேவை விதியின் விதிவிலக்காகும். தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாகவும். விலை கூடும்போது அதிகமாகவும் வாங்குவர். |
| **வெப்ளன் விளைவு (Veblen Effect)** | : | வெப்ளன் விளைவு என்பது, பணக்காரர்கள் போல் காட்டிக்கொள்பவர்கள் விலை உயர்வாக இருந்தாலும் சில பண்டங்களை சமூக அந்தஸ்திற்காக அதிகமான வாங்குகின்றனர். |
| **ஊக விளைவு** | : | ஒரு பண்டத்தின் விலை உயரும்போது எதிர்காலத்தில் இன்னும் அந்த பண்டத்தின் விலை உயரும் என்ற பயத்தில் நுகர்வோர் தற்பொழுது அதிகம் வாங்குவது ஊக விளைவு ஆகும். |
| **தேவை விரிவும், தேவைச் சுருக்கமும்** | : | விலையில் ஏற்படும் மாற்றத்தால் மட்டுமே தேவை அளவில் மாற்றம் ஏற்பட்டால் அதனை தேவை விரிவு மற்றும் சுருக்கம் என்கிறோம். |

www.surabooks.com



| | | |
|---|---|---|
| **தேவை விரிவு** | : | குறைந்த விலையில் அதிக பொருட்களை வாங்குவது தேவை விரிவு என்கிறோம். |
| **தேவை சுருக்கம்** | : | அதிக விலையில் குறைந்த பொருட்களை வாங்குவது தேவை சுருக்கம் ஆகும். |
| **தேவை நெகிழ்ச்சி** | : | விலையில் ஏற்படும் மாற்றம் எந்த அளவு தேவையில் மாற்றத்தைக் கொணர்கிறது என்பதை தேவை நெகிழ்ச்சி காட்டுகிறது. |
| **விலைத் தேவை நெகிழ்ச்சி** | : | விலைத் தேவை நெகிழ்ச்சி பொதுவாக தேவை நெகிழ்ச்சி என்றே அழைக்கப்படுகிறது. |
| **சமநோக்கு வளைகோடு** | : | சமநோக்கு வளைகோடு என்பது இரண்டு பண்டங்களின் பல்வேறு இணைப்புகளின் மூலம் கிடைக்கும் மன நிறைவானது சம அளவாக இருக்கும். |
| **சமநோக்கு வளைகோட்டுத் தொகுதி** | : | சமநோக்கு வளைகோட்டின் தொகுதி என்பது இரண்டு பண்டங்களுக்கான வெவ்வேறு நிலையான பயன்பாட்டை விளக்கும் பல சமநோக்கு வளைகோடுகளைக் கொண்டதாகும். |
| **நுகர்வோர் சமநிலை** | : | நுகர்வோர் பலபண்டங்களில் செலவினம் மேற்கொள்வதன் மூலம் அதிக மனநிறைவைப் பெறும்போது அவர் சமநிலையைப் பெறுகிறார். இது நுகர்வோர் சமநிலை ஆகும். |
| **நுகர்வோர் வரவுசெலவுக் கோடு** | : | நுகர்வோர் வருமானத்தைப் பொருத்து, கொடுக்கப்பட்டுள்ள விலையில் பண்டங்களை எவ்வளவு வாங்க முடியும் என்பதை அறிய வரவுச் செலவுக் கோடு பயன்படுகிறது. |
| **மனித விருப்பங்களின் பண்புகள்** | : | ஒவ்வொரு மனிதரும் விருப்பங்களின் தொகுப்பாக உள்ளார். மனித விருப்பங்கள் எண்ணற்றவையாகும். ஒரு விருப்பம் நிறைவடைந்தவுடன் மற்றொரு விருப்பம் புதிதாக தோன்றும். |
| **விருப்பங்களின் வகைகள்** | : | பொருளியலில் விருப்பங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை இன்றியமையாத பண்டங்கள், வசதிப்பண்டங்கள் மற்றும் ஆடம்பரப்பண்டங்கள் ஆகும். |
| **குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி** | : | குறைந்தசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி நுகர்வோரின் சாதாரண அனுபவத்தை விளக்குகிறது. |
| **சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி** | : | ஒரு நுகர்வோர், ஒரு பொருளுக்கு மேலாக பண்டங்களை நுகரும் போது, நுகர்வோரின் நடத்தைப் பற்றி 'சம இறுதிநிலை பயன்பாட்டு விதி' விளக்குகிறது. |
| **இயல்பெண் பயன்பாட்டு ஆய்வு** | : | நுகர்வோர் நடவடிக்கையை ஆராய பயன்பாட்டை அளக்க முடியும் என்ற கருத்தை கொண்டது இயல்பெண் பயன்பாட்டு ஆய்வு என்று பெயர். |
| **தரவாரி வரிசை** | : | பயன்பாடுகளை ஒப்பிடும் கருத்தைப் பயன்படுத்துவது தரவாரி வரிசை அளவை என்று பெயர். |
| **சராசரி பயன்பாடு** | : | சராசரி பயன்பாடு என்பது ஓர் அலகிற்கான பயன்பாடு ஆகும். $\boxed{AU = \frac{TU}{Q}}$ |

www.surabooks.com



## இலக்கணம்

| | | |
|---|---|---|
| **வரவு செலவுக் கோடு வரையறை** | : | கொடுக்கப்பட்ட விலை மற்றும் வருவாயில் நுகர்வோரின் இரண்டு பண்டங்களுக்கான பல்வேறு கலவைகளின் புள்ளிகளின் இணைப்பே ஆகும். |
| **விருப்பங்கள் வரையறை** | : | "பண்டங்கள் மற்றும் பணிகளை பயன்படுத்துவதின் மூலம் விருப்பங்கள் நிறைவடையும்". |
| **குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் இலக்கணம்** | : | "ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்றபொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" என்று மார்ஷல் இவ்விதியை வரையறை செய்கிறார். |
| **காசனின் இரண்டாம் விதி (அ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி (அ) நுகர்வோரின் உச்ச மனநிறைவு தரும் விதி – இலக்கணம்.** | : | "ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால், அதை அதன் பலவகைப் பயன்களிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் பயன்களின் இறுதிநிலைப் பயன்பாடு ஒரே அளவில் சமமாய் இருக்கும் வண்ணம் பகிர்ந்தளிப்பார்" என்று இவ்விதியை விளக்குகின்றார். |
| **நுகர்வோரின் உபரியின் இலக்கணம்** | : | "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட, வாங்குவதே மேல் என முடிவுசெய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம் என்று மார்ஷல் கூறுகிறார்". |
| **தேவை விதியின் இலக்கணம்** | : | 'விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது, விலை அதிகரிக்கும்போது தேவையின் அளவு குறைகிறது' என மார்ஷல் தேவை விதியை வரையறுக்கிறார். |
| **தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | "தேவை நெகிழ்ச்சி" என்ற கருத்துருவின் மூலம், குறிப்பிட்ட விலை மாற்றத்திற்கு தேவை அளவில் ஏற்படும் பதில் மாற்ற விகிதம் விளக்கப்படுகிறது என ஸ்டோனியர் மற்றும் ஹேக் கூறுகின்றனர். |
| **விலைத் தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | "விலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு தேவை அளவில் ஏற்படும் பதில் மாற்ற விளைவையே தேவை நெகிழ்ச்சி" என்கிறோம். |
| **வருமான தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | "வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் தேவையில் ஏற்படும் பதில் மாற்ற விகித அளவே வருமானத்தேவை நெகிழ்ச்சி" ஆகும். |
| **சமநோக்கு வளைகோட்டின் இலக்கணம்** | : | "இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே" சமநோக்கு வளைகோடு எனப்படும். |
| **பயன்பாடு வரையறு** | : | "பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள், பணிகளின் சக்தியே பயன்பாடு எனப்படும்." |
| **குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் இலக்கணம்** | : | "ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்து கிடைக்கும் பயன்பாடு குறைகிறது என்று" மார்ஷல் கூறுகிறார். |

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



| | | |
|---|---|---|
| **சம – இறுதிநிலைப் பயன்பாட்டின் வரையறை** | : | மார்ஷல் அவர்களின் வரையறைப்படி "ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால், அதன் பலவகைப் பயன்களிடையே பரவலாகப் பகிர்ந்தளிக்கும்போது அதன் பயன்களின் இறுதிநிலைப் பயன்பாடு ஒரே அளவில் சமமாய் இருக்கும் வண்ணம் பகிர்ந்தளிப்பார்" என்று மார்ஷல் இவ்விதியை விளக்குகிறார். |
| **நுகர்வோர் எச்சம் இலக்கணம்** | : | மார்ஷலின் இலக்கணம் பின்வருமாறு "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட வாங்குவதே நல்லது என்று முடிவு செய்து, கொடுக்க நினைக்கும் விலைக்கும், நுகர்பவர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம் எனப்படும்." என இலக்கணம் தந்துள்ளார். |
| **சமநோக்கு வளைகோட்டின் இலக்கணம்** | : | "இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே" சமநோக்கு வளைக்கோடு எனப்படும். |
| **தேவை நெகிழ்ச்சியின் இலக்கணம்** | : | தேவை நெகிழ்ச்சியின் கருத்தை ஆல்ஃபிரட் மார்ஷல் அறிமுகப்படுத்தினார். இவரது கருத்துப்படி, தேவை நெகிழ்ச்சியானது. "ஒரு குறிப்பிட்ட விலை உயர்வு காரணமாக அங்காடியில் ஒரு பண்டத்திற்கான தேவை அதிகமாக, அல்லது குறைவாக மாறுவதை தேவை நெகிழ்ச்சி மிகையானது அல்லது குறைவானது எனலாம்" என கூறுகிறார். |
| **அளிப்பு விதியின் இலக்கணம்** | : | "ஒரு பொருளுக்கான அளிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட விலையில் ஒரு விற்பனையாளன் எவ்வளவு விற்க முன்வருகிறான் என்பதை குறிக்கும்." |
| **அளிப்பு பெருக்கம்** | : | "அதிகமான விலையில், அதிகமான பண்டங்களை விற்பனைச் செய்வது அளிப்பின் பெருக்கம் என்று கூறப்படும்." |
| **அளிப்பு சுருக்கம்** | : | "குறைவான விலையில், குறைவான பண்டங்கள் விற்பனை செய்யும் போது, அது அளிப்பு சுருக்கம்" என்று பெயர். |

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

## புத்தக வினாக்கள் மற்றும் விடைகள்

### மாதிரி வினாக்கள்

### பகுதி - அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. முரண்பட்டதை தெரிவு செய்க.** *[BEQ; First Mid - '18; HY-'18; Sep-2020; June-'23]*

(அ) ஆடம்பர பண்டங்கள்
(ஆ) வசதிபண்டங்கள்
(இ) அத்தியாவசிய பண்டங்கள்
(ஈ) விவசாயப் பொருட்கள்

விடை **(ஈ) விவசாயப் பொருட்கள்**

**2. தெரிவுகள் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டவையாக இருப்பதற்கு காரணம் வளங்கள் _____ இருப்பதால்.**

(அ) பற்றாக்குறை (ஆ) அளிப்பு
(இ) தேவை (ஈ) அபரிமிதமான

விடை **(அ) பற்றாக்குறை**

**3. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்.** *[BEQ; Govt. MQP-'18; QY-'18]*

(அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் (ஆ) ஆர்.ஜி.டி.ஆலன்
(இ) மார்ஷல் (ஈ) ஸ்டிக்லர்

விடை **(இ) மார்ஷல்**

**4. கீழ்க்காணும் வாய்ப்பாட்டின் மூலம் இறுதிநிலை பயன்பாட்டை அளவிடலாம்.** *[BEQ; First Mid - '18; Mar-2020]*

(அ) $TU_n - TU_{n-1}$ (ஆ) $TU_n - TU_{n+1}$
(இ) $TU_n + TU_{n+1}$ (ஈ) $TU_n - TU_{n+1}$

விடை **(அ) $TU_n - TU_{n-1}$**

**5. இறுதிநிலைப் பயன்பாடு சுழியமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு _____.** *[QY - '19; Sep-2020; May-'22; HY-'23 & '24; Mar-'24]*

(அ) குறைவாக (ஆ) உச்சமாக
(இ) சுழியமாக (ஈ) எதிர்மறையாக

விடை **(ஆ) உச்சமாக**

**6. காஸன் முதல் விதி _____ என்றும் அழைக்கப்படுகிறது.**

(அ) சமஇறுதி நிலைப் பயன்பாட்டு விதி சுழிய
(ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
(இ) தேவை விதி
(ஈ) குறைந்து செல் விளைவு விதி

விடை **(ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி**

**7. கீழ்க்காணும் விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டுள்ளது.**

(அ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
(ஆ) அளிப்புவிதி
(இ) சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
(ஈ) காஸன் விதி

விடை **(அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி**

**8. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்** *[CRT-'22; June-'23]*

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்
(இ) ராபின்ஸ் (ஈ) ரிக்கார்டோ

விடை **(ஆ) மார்ஷல்**

**9. தகுவிலை ரூ250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.** *[BEQ; First Mid - '18; Mar & QY-'23; July-'42]*

(அ) 375 (ஆ) 175 (இ) 200 (ஈ) 50

விடை **(ஈ) 50**

**10. சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது _____.** *[BEQ; QY-'18]*

(அ) தரவரிசை ஆய்வு (ஆ) இயல்பெண் ஆய்வு
(இ) பண்பளவை ஆய்வு (ஈ) உளவியல் ஆய்வு

விடை **(அ) தரவரிசை ஆய்வு**

**11. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் _____.** *[QY - '19; HY - '19]*

(அ) பெர்கூசன் (ஆ) கீன்ஸ்
(இ) ஆடம் ஸ்மித் (ஈ) மார்ஷல்

விடை **(ஈ) மார்ஷல்**

**12. கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?** *[BEQ; First Mid - '18; QY-'18 & '23; CRT-'22]*

(அ) வரி அதிகரிப்பதால்
(ஆ) அதிக மானியம் வழங்குவதால்
(இ) வட்டி வீதம் அதிகரிப்பதால்
(ஈ) மக்கள் தொகை குறைவதால்

விடை **(ஆ) அதிக மானியம் வழங்குவதால்**

**13. கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்க்காணுமாறு அழைக்கப்படுகிறது.**

(அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம்

(ஆ) தேவை இடப்பெயர்வு

(இ) தேவை கூடுதல் மற்றும் குறைதல்

(ஈ) மேற்காண் அனைத்தும்

விடை **(அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம்**

**14. மிகைத்தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக்கோட்டின் வடிவமானது _____.**

(அ) படுகிடை (ஆ) செங்குத்து

(இ) விரைந்து சரியும் (ஈ) மெதுவாக சரியும்

விடை **(ஈ) மெதுவாக சரியும்**

**15. நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலைப் பயன்பாடானது _____ இருக்கும்.** *[Aug-'22]*

(அ) குறைவாக (ஆ) எதிர்மறை

(இ) சமமாக (ஈ) கூடுதலாக

விடை **(இ) சமமாக**

**16. சமநோக்கு வளைகோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்.** *[BEQ]*

(அ) ஹிக்ஸ் (ஆ) ஆலன்

(இ) கீன்ஸ் (ஈ) எட்ஜ்வொர்த்

விடை **(ஈ) எட்ஜ்வொர்த்**

**17. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும்போது அது _____.** *[May-'22]*

(அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி

(ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது

(இ) முற்றிலும் நெகிழ்ச்சியற்றத் தேவை

(ஈ) மிகைத் தேவை

விடை **(அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி**

**18. சம அளவு திருப்தியைக் கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடானது இதனுடன் தொடர்புடையவை.**

(அ) சம நோக்கு வளைகோடுகள்

(ஆ) இயல்பெண் ஆய்வு

(இ) தேவை விதி (ஈ) அளிப்பு விதி

விடை **(அ) சம நோக்கு வளைகோடுகள்**

**19. சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?** *[HY - '19 & '24;CRT & Aug-'22]*

(அ) தரப்படுத்துதல்

(ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்

(இ) வார்த்தைப்படுத்துதல்

(ஈ) எதுவுமில்லை

விடை **(அ) தரப்படுத்துதல்**

**20. சம நோக்கு வளைகோடுகள்** *[QY - '19 &'23; Sep-'21; HY–'23]*

(அ) செங்குத்துக் கோடுகள்

(ஆ) படுக்கைக் கோடுகள்

(இ) நேர்மறைச் சரிவுடையவை

(ஈ) எதிர்மறைச் சரிவுடையவை

விடை **(ஈ) எதிர்மறைச் சரிவுடையவை]**

## பகுதி - ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு வரிகளில் விடையளி.**

**21. பயன்பாட்டை வரையறுக்க.** *[BEQ; QY-'18; Sep-2020]*

விடை. ♦ பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும்போது நுகர்வோருக்குக் கிடைப்பதாக நுகர்வோர் கருதுவது.

♦ விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல்.

**22. விருப்பங்களை வகைப்படுத்துக.** *[June & QY-'23; Mar-'24]*

விடை. விருப்பங்களின் வகைகள் மூன்று.

♦ இன்றியமையாத விருப்பம்.

♦ வசதிக்கான விருப்பம்.

♦ ஆடம்பரத்திற்கான விருப்பம்.

**23. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.**

விடை. ♦ நுகர்வு ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கையாகும்.

♦ நுகர்வின் தன்மை மற்றும் அளவின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரம் தீர்மானிக்கப்படுகிறது.

♦ ஒருவரின் விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தி நுகர்வுக்கு உண்டு.

**24. விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.** *[HY - '19, '23 & '24;CRT-'22]*

விடை. விலையில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக தேவையில் ஏற்படும் மாற்றம் விலைத் தேவை நெகிழ்ச்சியாகும்.

♦ முற்றிலும் நெகிழ்ச்சியுள்ள தேவை ($EP = \infty$)

♦ முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை ($EP = 0$)

♦ மிகைத் தேவை நெகிழ்ச்சி ($EP > 1$)

♦ குறைவான நெகிழ்ச்சியுள்ள தேவை / குறைத்தேவை நெகிழ்ச்சி ($EP < 1$)

♦ அலகுத் தேவை நெகிழ்ச்சி ($EP = 1$)

www.surabooks.com

**25. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?**
*[BEQ; First Mid - '18; Aug-'22; July-'24]*

**விடை.** ஒரு வளைகோட்டில் உள்ள இரு பண்டங்களின் அனைத்து கலவையும் நுகர்வோருக்கு சமஅளவு மனநிறைவைத் தருமாயின் அது சமநோக்கு வளை கோடாகும். இது சம பயன்பாட்டு வளைகோடு அல்லது சமதிருப்திக்கோடு எனவும் அழைக்கப்படுகிறது.

**26. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.**
*[Sep-'21]*

**விடை.**
- ♦ ஒரு பொருளுக்கு நுகர்வோர் கொடுக்க விரும்பும் விலைக்கும் உண்மையிலேயே கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசமே நுகர்வோர் எச்சம்.
- ♦ நுகர்வோர் எச்சம் = கொடுக்க நினைத்த விலை – உண்மையில் கொடுத்த விலை

அல்லது

- ♦ நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை.

$= TU - (P \times Q)$

| | |
|---|---|
| TU | = மொத்தப் பயன்பாடு |
| P | = விலை |
| Q | = பண்ட அளவு |

**27. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?**
*[First Mid - '18; QY - '19 & '23; Mar-'23]*

**விடை.**
- ♦ கிஃபன் பண்டங்கள் அல்லது தாழ்ந்தரக பண்டங்கள் தேவை விதியின் விதி விலக்காகும்.
- ♦ தாழ்ந்தரக பண்டங்களின் விலை குறையும்போது ஏழைகள் அவற்றைக் குறைவாகவும் மேலும் விலை கூடும்போது அதிகம் வாங்குவர்.
(எ.கா.) அரிசி, ராகி

## பகுதி - இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

**28. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.**
*[Mar-'19; CRT & May- '22 HY-'23]*

**விடை.**
- ♦ விருப்பங்கள் எண்ணற்றவை.
- ♦ விருப்பங்கள் பழக்க வழக்கங்களாக மாறும்.
- ♦ விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை.
- ♦ விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை.
- ♦ விருப்பங்கள் போட்டியிடுபவை.
- ♦ விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.
- ♦ விருப்பங்கள் மீளத் தோன்றுபவை.

**29. மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலைப் பயன்பாட்டிற்கும் உள்ள உறவை விளக்குக.**
*[BEQ; First Mid & HY- '18; QY - '19; Sep-2020]*

**விடை.**
- ♦ ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாட்டின் கூடுதலே **மொத்தப் பயன்பாடு** ஆகும்.
- ♦ கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை நுகர்வதால், மொத்தப் பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் அல்லது மாற்றமே **இறுதிநிலைப் பயன்பாடு** ஆகும்.
- ♦ $MU_n = TU_n - TU_{n-1}$

மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள தொடர்பு.

| வ. எண் | இறுதிநிலைப் பயன்பாடு | மொத்தப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | இறுதிநிலைப் பயன்பாடு குறையும். | மொத்தப் பயன்பாடு அதிகரிக்கும். |
| 2 | இறுதிநிலைப் பயன்பாடு சுழியத்தை அடையும். | மொத்தப் பயன்பாடு உச்ச நிலையை அடையும். |
| 3 | இறுதிநிலைப் பயன்பாடு எதிர்மறையில் செல்லும். | மொத்தப் பயன்பாடு குறையும். |

**30. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.** *[BEQ; First Mid - 2018; Mar.-'19; QY-'23; July-'24]*

**விடை. இலக்கணம் :**
"ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட, வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம்" எனப்படும் என்று மார்ஷல் கூறுகிறார்.

**31. நுகர்வோர் எச்சம் கருத்தை விளக்குக.**
*[May-'22]*

**விடை. மார்ஷலின் நுகர்வோர் எச்சம் : இலக்கணம்**
"ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட வாங்குவதே மேல் என முடிவுசெய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம்" எனப்படும் என்று மார்ஷல் கூறுகிறார்.

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மைவிலை

(அ)


நுகர்வோர் எச்சம்= (மொத்தப் பயன்பாடு – (உண்மைவிலை × பண்ட அலகுகள்)

$CS = TU - P \times Q$

www.surabooks.com



**நுகர்வோர் எச்ச வரைபடம்**




**வரைபட விளக்கம் :**

- ♦ X - அச்சில் தேவையின் அளவும், Y - அச்சில் விலையும் குறிக்கப்பட்டுள்ளது
- ♦ DDI என்பது நுகர்வோரின் பல்வேறு பண்ட அலகுகளின் மூலம் பெறும் பயன்பாட்டைக் குறிக்கும்.
- ♦ விலை OP ஆக இருக்கும் போது தேவை அளவு OQ ஆக உள்ளது.
- ♦ எனவே, உண்மை விலை OPCQ – (OP × OQ) ஆகும். தகுவிலை (மொத்தப் பயன்பாடு) ODCQ ஆகும்.

| நுகர்வோர் எச்சம் = ODCQ – OPCQ = PDC |
|---|

∴ நுகர்வோர் எச்சம் நிழலிட்ட பகுதி ஆகும்

**32. தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.** *[QY-'19; HY - '19 & '24; Mar-'23]*

விடை. ♦ விலையில் ஏற்படும் மாற்றத்தால் மட்டுமே தேவை அளவில் மாற்றம் ஏற்பட்டால் அதனை தேவை விரிவு மற்றும் சுருக்கம் என அழைக்கிறோம்.

- ♦ வேறு வகையில் கூறினால், குறைந்த விலையில் அதிக பொருட்களை வாங்குவது தேவை விரிவு; மற்றும், அதிக விலையில் குறைந்த பொருட்களை வாங்குவது சுருக்கம் ஆகும்.

**33. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?** *[QY-'18 & '23;CRT & Aug-'22; June-'23; Mar-'24]*

விடை. **சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் :**


- ♦ சமநோக்கு வளைகோடு **கீழ்நோக்கிய சரிவைக் கொண்டது.**
- ♦ சமநோக்கு வளைகோடுகள் **தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.**
- ♦ சமநோக்கு வளைகோடு **ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.**
- ♦ சமநோக்கு வளைகோடுகள் **X அச்சையோ Y அச்சையோ தொடாது.**

**34. நுகர்வோர் சமநிலை என்ற கருத்தைச் சுருக்கமாக விவரி.** *[BEQ; First Mid - '18]*

விடை. **நுகர்வோர் சமநிலை :**

நுகர்வோர் தனது வருமானத்தின் முழுமையும் பண்டங்களை வாங்க செலவிடுவதன் மூலம் அதிலிருந்து அதிகபட்ச மனநிறைவை பெறுகின்ற புள்ளியே நுகர்வோர் சமநிலைப் புள்ளி ஆகும்.

**நுகர்வோர் சமநிலை**




**வரைபட விளக்கம் :**

- ♦ சமநோக்கு வளைகோட்டின் அடி மட்டத்தில் வரவு செலவுக் கோடு தொடும் புள்ளியில் நுகர்வார் சமநிலை அடைகிறார்.
- ♦ AB என்ற வரவு செலவுக்கோடு $IC_3$ என்னும் சமநோக்கு வளைகோட்டை T என்ற புள்ளியில் தொடுகிறது.
- ♦ இந்த $IC_3$ வளைகோடே இருக்கின்ற வருமானத்தில் அதிக அளவு மனநிறைவைத் தரும் வளைகோடாகும்.
- ♦ இந்த சமநிலைப் புள்ளியில் ICயின் சாய்வு (slope) MRSxy யைக் குறிக்கிறது(இறுதிநிலை பதிலீட்டு வீதம்). வரவு செலவுக் கோட்டின் சாய்வு X மற்றும் Yன் விலை விகிதத்தை குறிக்கிறது. (Px / Py). ஆகவே MRSxy = Px / Py.

## பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.**

விடை. **தேவை விதி :** *[BEQ; First Mid & HY - '18; QY-'18 &'23; Mar.'19; Sep-'21;CRT & Aug-'22; Mar-'23; July & HY-'24]*

தேவை விதியை முதலில் 1838ல் அகஸ்டின் கூர்னாட் விளக்கினார். பின் ஆல்ஃப்ரட் மார்ஷல் இதைச் சீர்படுத்தி விரிவாக்கினார்.

www.surabooks.com

**இலக்கணம் :**

'மற்றவை மாறாமல் இருக்கும்போது, ஒரு பொருளுக்கான விலை குறையும்போது மக்கள் அப்பொருளை அதிகம் வாங்குவர், விலை ஏறும்போது குறைவாக வாங்குவர்' – சாமுவேல்சன்.

**தேவை விதியின் எடுகோள்கள் :**

♦ நுகர்வோர் வருமானத்தில் மாற்றமில்லை.

♦ நுகர்வோரது சுவையிலும் தேர்ந்தெடுத்த மற்றும் பழக்கத்திலும் மாற்றமில்லை.


♦ பிறபொருட்களின் விலையில் மாற்றமில்லை.

♦ பிற பதிலிகள் இல்லை.

♦ பண்டத்தின் தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. கொடுக்கப்பட்ட அனுமானங்களில் ஏதேனும் ஒன்றில் மாற்றம் ஏற்பட்டாலும் இவ்விதி செயல்படாது.

**தேவை அட்டவணை**

| விலை ₹ | தேவை அளவு (அலகுகள்) |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |




**வரைபட விளக்கம் :**


♦ X அச்சில் பண்டம் அளவும், Y அச்சில் விலையும் குறிப்பிடப்படுகின்றன.

♦ DD என்பது தேவைக் கோடாகும்.


♦ தேவை அளவு கீழ் நோக்கிச் சரிந்து செல்கிறது. அதாவது இடமிருந்து வலமாக கீழ் நோக்கிச் சரிகிறது.

**பண்டத்திற்கான அங்காடித் தேவை :**


**A என்பவரது தேவை**





**B என்பவரது தேவை**




**C என்பவரது தேவை**




**அங்காடித் தேவை**




அங்காடியில் உள்ள அனைத்து தனிமனிதர்களின் தேவை அளவினை ஒன்று கூட்டினால் பண்டத்திற்கான அங்காடித் தேவை வளைகோட்டினைப் பெறலாம்.

**தேவை விதியின் விதிவிலக்குகள் :**

பொதுவான தேவை வளைகோடு இடமிருந்து வலமாக கீழ்நோக்கிச் சரியும். ஆனால் சில விதிவிலக்கு தேவைக் கோடுகள் இந்த விதிக்கு கட்டுப்படாமல் மாறிச் செயல்படும்; குறிப்பிட்ட சில பண்டங்களின் விலை குறைவு தேவை சுருக்கத்தையும், விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவைக்கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவைக்கோடு என அழைக்கப்படுகிறது.

**36. குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.** *[BEQ; Govt. MQP-'18; QY-'18,'19 & '23; Sep-'21;CRT, May & Aug-'22]*

**விடை. அறிமுகம் :**

♦ ஆஸ்திரிய பொருளியல் வல்லுனரான **H.H. காசன்** (Gossen) என்பவர் இவ்விதியை 1854 ல் பொருளியலில் முதன் முதலாக உருவாக்கினார்.

♦ ஜெவான்ஸ் இவ்விதியை காசனின் முதல் நுகர்வு விதி என அழைத்தார்.

**இலக்கணம் :**

'ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்றபொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது' என்று மார்ஷல் இவ்விதியை வரையறை செய்கிறார்.

www.surabooks.com



**எடுகோள்கள் :**

- ♦ பயன்பாடு எண்ணளவையில் அளவிடப்பட வேண்டும்.
- ♦ பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாது இருக்க வேண்டும்.
- ♦ நுகர்வோர் பகுத்தறிவாளராக இருக்க வேண்டும். மேலும் குறைந்த செலவில் அதிக மனநிறைவு பெறும் குறிக்கோள் உடையவராக இருக்க வேண்டும்.
- ♦ நுகரப்படும் பண்ட அளவு ஒரே சீரானதாக இருக்க வேண்டும்.
- ♦ நுகரப்படும் பண்டத்தின் எல்லா அளவுகளும் ஒத்த தன்மை கொண்டவை.


  (எ.கா) எடை, தரம், சுவை, நிறம் போன்றவை.
- ♦ பண்டங்களை நுகரும் போது கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகர வேண்டும்.

**விளக்கம் :**

ஒரு நுகர்வோர் ஒரே பண்டத்தை தொடர்ந்து கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக நுகரும்போது ஒவ்வொரு கூடுதல் பொருளிலிருந்து கிடைக்கிற பயன்பாடு (இறுதிநிலைப் பயன்பாடு) குறைந்து செல்லும் என்று இவ்விதி விளக்குகிறது.

**அட்டவணை இறுதிநிலை பயன்பாடு**

| ஆப்பிள் அலகுகள் | இறுதிநிலைப் பயன்பாடு | மொத்தப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 15 (35 –20) | 35 |
| 3 | 10 (45 – 35) | 45 |
| 4 | 5 (50 – 45) | 50 |
| 5 | 0 (50 – 50) | 50 |
| 6 | –5 (45 – 50) | 45 |
| 7 | –10 (35 – 45) | 35 |




**வரைபட விளக்கம் :**

- ♦ X – அச்சு அலகுகளும், Y – அச்சில் TU & MU ம் குறிக்கிறது.
- ♦ ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார்.
- ♦ முதல் ஆப்பிளில் இருந்து அவர் பெற்ற பயன்பாடு 20 அலகுகள்.
- ♦ இரண்டாவது ஆப்பிளில் இருந்து பெற்ற பயன்பாடானது முதல் ஆப்பிளை விட குறைவானதாகும் (15 அலகுகள்).
- ♦ மூன்றாவது பண்டத்திலிருந்து கிடைக்கும் பயன்பாடு இரண்டாவது ஆப்பிள் பயன்பாட்டை விடக் குறைவு (10 அலகுகள்).
- ♦ மேலும் ஐந்தாவது ஆப்பிளில் இருந்து அவர் பெற்ற பயன்பாடு சுழியம் ஆகும். மேலும் ஆறாவது, ஏழாவது ஆப்பிள்களை நுகர்ந்தால் அவர் பெறுவது எதிர்மறைப் பயன்பாடாகும். (விருப்பமில்லா நிலை அல்லது திகட்டும் நிலை).
- ♦ இந்தப் போக்கை கூறுவதே குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி ஆகும்.

**37. சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை விளக்குக.**
*[BEQ; QY-'18; CRT-'22 HY-'23]*

விடை. **சம இறுதிநிலை பயன்பாட்டு விதி :**

- ♦ குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியானது விரிவாக்கப்பட்டு சமஇறுதிநிலை பயன்பாட்டு விதியாக உருவானது.
- ♦ இவ்விதி "பதிலீட்டு விதி", "நுகர்வோரின் சமநிலை விதி" காசனின் **"இரண்டாம் விதி"** மற்றும் **"உச்ச பட்ச மனநிறைவு விதி"** என்றும் அழைக்கப்படுகிறது.

**வரையறை :**

மார்ஷலின் கூற்றுப்படி, "ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால், அதன் பலவகைப் பயன்களிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் பயன்களின் இறுதிநிலைப் பயன்பாடு ஒரே அளவில் சமமாய் இருக்கும்படி பகிர்ந்தளிப்பான், ஒன்றை விட மற்றொன்றில் அதிக இறுதிநிலைப் பயன்பாடு கிடைக்குமெனில் அவர் அதிகப்பயன் பெறும் நோக்கில் குறைந்த பயன்தரும் பொருளில் இருந்து அதிக பயன்தரும் பொருளுக்கு மாறிவிடுவார்.

**ஊகங்கள் :**

- ♦ மனநிறைவை அதிகப்படுத்த விரும்பக் கூடிய பகுத்தறிவாளராக இருக்க வேண்டும்.

www.surabooks.com

www.surabooks.com



- ♦ ஒவ்வொரு பண்டத்தின் பயன்பாடும் எண்ணளவில் அளவிடப்பட வேண்டும்.
- ♦ பணத்தின் இறுதிநிலைப் பயன்பாட்டில் மாற்றமில்லை.
- ♦ நுகர்வோரின் வருமானம் வரையறுக்கப்பட்டன.
- ♦ பொருட்களின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.
- ♦ பண்டங்களின் விலைகள் வரையறுக்கப்பட்டன.
- ♦ குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி செயல்படுகிறது.

**விளக்கம் :**

- ♦ ஆப்பிள் மற்றும் ஆரஞ்சு எனும் இரு பண்டங்களில் தன் வரையறுக்கப்பட்ட வருமானத்தை ஒரு நுகர்வோர் செலவிட விரும்புகிறார் என்று எடுத்துக் கொள்வோம்.
- ♦ அவரின் வரையறுக்கப்பட்ட வருமானத்தில் அதிக மனநிறைவை பெறக்கூடிய நிலையில் அவர் சமநிலையை அடைவார். அவரின் சமநிலையை கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

$$\frac{\text{ஆப்பிளின் இறுதிநிலைப் பயன்பாடு}}{\text{ஆப்பிளின் விலை}} = \frac{\text{ஆரஞ்சின் இறுதிநிலைப் பயன்பாடு}}{\text{ஆரஞ்சின் விலை}} = K$$

எனவே $\frac{MU_A}{P_A} = \frac{MU_O}{Po} = K$

- ♦ K– என்பது பணத்தின் நிலையான இறுதிநிலைப் பயன்பாடு. எ.கா. 50/10 = 20/4 = 5
- ♦ மேற்கூறிய சமன்பாட்டின் அடிப்படையில் இவ்விதியானது 'நுகர்வுச் சமநிலை விதி' என்று அழைக்கப்படுகிறது.
- ♦ ஒருவேளை $\frac{MU_A}{P_A}$ வைவிட $\frac{MU_O}{Po}$ குறைவாக இருக்குமெனில் அவர் ஆப்பிளிலிருந்து ஆரஞ்சுக்குத் தான் செலவழிக்கும் தொகையை மாற்றிக் கொள்வார். இந்த பதிலீட்டு செயலானது அவருக்கு அதிக மனநிறைவை இரண்டு பண்டங்களில் இருந்தும் பெற வழிவகுக்கும். எனவே, இவ்விதியானது 'பதிலீட்டு விதி' என்றும் அழைக்கப்படுகிறது.


எ.கா. ஆரஞ்சு : 20/4 ஆப்பிள் 50/25. இச்சூழலில் ஆப்பிளை நுகவர்தைவிட, ஆரஞ்சை நுகர்வது புத்திசாலித்தனம்.

| ஆப்பிள் | | | | ஆரஞ்சு | | |
|---|---|---|---|---|---|---|
| பண்டங்கள் எண்ணிக்கை | மொத்தப் பயன்பாடு | இறுதி நிலைப் பயன்பாடு | $\frac{MU_A}{P_A}$ | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு | $\frac{MU_O}{Po}$ |
| 1 | 25 | 25 | 25/2 = 12.5 | 30 | 30 | 30/1 = 30 |
| 2 | 45 | 20 | 20/2 = 10 | 41 | 11 | 11/1 = 11 |
| 3 | 63 | 18 | 18/2 = 9 | 49 | 8 | 8/1 = 8 |
| 4 | 78 | 15 | 15/2 = 7.5 | 54 | 5 | 5/1 = 5 |
| 5 | 88 | 10 | 10/2 = 5 | 58 | 4 | 4/1 = 4 |
| 6 | 92 | 4 | 4/2 = 2 | 61 | 3 | 3/1 = 3 |

**எடுத்துக்காட்டு விளக்கம் :**

நுகர்வோர் ₹ 14ஐ வருமானமாகக் கொண்டுள்ளார் என எடுத்துக் கொள்வோம். அவர் அந்த முழுத் தொகையையும் ஆப்பிளுக்காகவும் ஆரஞ்சுக்காகவும் செலவிட விரும்புகிறார். ஆப்பிளின் விலை ₹ 2 ஆரஞ்சின் விலை ₹ 1 ஆகவும் இருக்கிறது.

**சம இறுதிநிலைப் பயன்பாடு**




**வரைபட விளக்கம் :**

- ♦ X – அச்சில் செலவின் அளவும், Y – அச்சில் ஆப்பிள் மற்றும் ஆரஞ்சின் இறுதிநிலைப் பயன்பாட்டையும் குறிப்பிடுகிறோம்.
- ♦ நுகர்வோர் ஆப்பிளுக்கான ₹ 10ம், ஆரஞ்சுக்காக ₹ 4ம் செலவிடுகிறார் எனக் கொண்டால், இரண்டின் இறுதிநிலைப் பயன்பாடும் சமமாக இருக்கும். [i.e. AA1 = BB1 (5=5)].
- ♦ ஆகவே அவர் உச்ச பயன்பாட்டினை பெறுகிறார்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000